163

# சைவ போதினி

அறநெறிப் பாடசாலைகளுக்கான
இலவச வெளியீடு - 9

## பாலர் பிரிவு

வெளியீடு :
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்.

# சைவ போதினி

1 ஆம் , 2ஆம், 3 ஆம் வகுப்புகள்

## அறநெறிப் பாடசாலைகளுக்கான
## இலவச வெளியீடு - 9

பதிப்புரிமை:
விவேகானந்த சபை, கொழும்பு

வெளியீடு:
இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்
248. 1/1, காலி வீதி,
கொழும்பு-04.

2.- CM 015014 - 3,000 (2012/ 09)

நூற்பதிப்புத் தரவுகள்:

**சைவ போதினி**
**பாலர் பிரிவு**
**(1 ஆம் , 2ஆம், 3 ஆம் வகுப்புகள்)**

**அறநெறிப் பாடசாலைகளுக்கான இலவச வெளியீடு - 9**

| | | |
|---|---|---|
| மறுபதிப்பு | : | 2012 |
| பிரதிகள் | : | 5000 |
| அச்சு | : | ஓப்செட் |
| பதிப்புரிமை | : | விவேகானந்த சபை, கொழும்பு. |
| வெளியீடு | : | இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,<br>248 1/1, காலி வீதி,<br>கொழும்பு-04. |
| பக்கங்கள் | : | 70 |

## நன்றி

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் நடவடிக்கைகளை நல்ல முறையில் செயற்படுத்தும் பொருட்டு, அறநெறிப் பாடசாலைகளில் விநியோகிப்பதற்காக **'சைவ போதினி'** இரண்டாம், மூன்றாம் வகுப்பு நூல்களை மீண்டும் பதிப்பித்து வெளியிட அனுமதி தந்த கொழும்பு விவேகானந்த சபையினருக்கு எமது மனம் நிறைந்த நன்றிகள்.

**இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,**
248, 1/1, காலி வீதி,
கொழும்பு-04.

# வெளியீட்டுரை

இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் இந்துச் சிறார்கள் அறநெறிப்பாடசாலைகளிற் பயின்று வருகின்றார்கள். ஆலய பரிபாலன சபைகளும், இந்துசமய அமைப்புகளும் இவற்றைச் சிறப்பாக நடத்தி வருகின்றன.

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம், அறநெறிப் பாடசாலைகளின் முழுமையான இயக்கத்துக்கு இயன்றளவு பங்களிப்பினை நல்கி வருகின்றது. அதன் ஓரம்சமாக இலவச வெளியீடுகளாக உசாத்துணை நூல்கள் அச்சிடப்பட்டு வழங்கப்படுகின்றன.

கொழும்பு விவேகானந்த சபையினர், பல்லாண்டு காலமாக **'சைவபோதினி'** நூல்களை வகுப்பு ரீதியாக அச்சிட்டு வழங்கியதோடு, சைவசமயப் பாடப் பரீட்சைகளையும் நடத்தி மாணவர்களை ஊக்குவித்து வந்தனர். அவர்களின் அனுமதியுடன் **'சைவபோதினி'** நூல்களை மீளப்பதிப்பித்து அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கென திணைக்களம் வழங்கி வருகின்றது. சபையினர் பதிப்பித்த இரண்டாம், மூன்றாம் வகுப்பு **'சைவபோதினி'** நூல்கள், பாலர் பிரிவிற்கான ஒரே நூலாக வெளியிட்டு வைக்கப்படுகின்றன. இந்த நூலின் மூலம் பாலர் பிரிவிற் பயிலும் இளஞ்சிறார்கள் நமது சமயத்தின் அடிப்படையான பல விடயங்களையும் அறிந்து கொள்வார்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

இந்நூலை மீண்டும் பதிப்பித்து வெளியிட அனுமதி தந்த கொழும்பு விவேகானந்த சபையினருக்கும், குறுகிய காலத்தில் சிறப்பாக அச்சிட்டுதவிய அரச அச்சகத்தினருக்கு எமது நன்றிகளைத் தெரிவிக்கின்றோம்.

**சாந்தி நாவுக்கரசன்**
**பணிப்பாளர்.**

இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
248, 1/1, காலி வீதி,
கொழும்பு-04.

உ

சிவமயம்

# சைவ போதினி

## இரண்டாம் வகுப்பு

**அரசினர் பாடத்திட்டத்திற்கு அமைய எழுதப்பெற்றது**

**1979**

உரிமை பெற்றது.

# பதிப்புரை

(கொழும்பு, விவேகாநந்த சபை இந்நூலை
வெளியிட்ட போது இடம்பெற்ற பதிப்புரை)

எமது சபையார் நடாத்தும் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சைக்குரிய அரசினர் பாடத்திட்டத்துக்குச் சிறந்த முறையில் உதவக்கூடிய வழியில், **'சைவபோதினி'** தொகுக்கப்பட்டுள்ளது. சைவ மாணாக்க, மாணாக்கியர் தத்தம் தகுதிகட்கு ஏற்றவாறு, இலகுவிற் படித்துக் கிரகிக்கக் கூடிய முறையில், இப்புதிய வெளியீடு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் இரண்டாம் வகுப்புச் சிறுவர்களுக்குப் பயன்படக்கூடிய சிறந்த பதிப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றது. சைவசமயத்தின் தத்துவார்த்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடங்கள், நாயன்மார் சரித்திரங்கள், புராணக்கதைகள், சைவத்திருமுறைகள் இப்பதிப்பில் இலகுவாகப் போதிக்கப்படக்கூடிய முறையில் அரசினர் பாடத்திட்டத்தைத் தழுவியே எழுதப்பட்டுள்ளன.

கடந்த ஐம்பது வருடங்களாக இச்சபையாரால் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டுவரும் அகில இலங்கைச் சைவ சமய பாடப் பரீட்சையும், இப்பரீட்சையின் அடிப்படைக் காரணமாகிய சைவசமயப் போதனையும் மேன்மேலும் விருத்தியடைந்து வருவதற்கு 'சைவபோதினி' ஒரு பற்றுக்கோடாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

"குற்றங்களைந்து குணமளைந்து கொள்ளுதல், கற்றறிந்த மாந்தர் கடன்" என்பதற்கமைய இப்பதிப்பிற் குறைகள், பிழைகள் இருப்பின் அவற்றை எமக்கு அறிவிக்குமாறு அன்பர்களை அன்புடன் வேண்டுகின்றோம்.

இந்நூற்றொகுதியில் உள்ள பாடங்களை ஒழுங்காகக் கற்கும் மாணவருலகம் நன்மை பெறும் என்பதில் யாதுமோர் ஐயுறவில்லை.

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

34, விவேகானந்த மேடு,
கொழும்பு-13.
17-01-79.

**கொழும்பு**
**விவேகாநந்த சபையார்.**




3 - CM 015014

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 01. | சிவபெருமான் பன்றிக் குட்டிகளுக்குப் பால் கொடுத்தமை | 9 |
| 02. | உமாதேவியார் குழந்தைகளுக்குப் பால் கொடுத்தமை | 11 |
| 03. | தேவாரம் | 13 |
| 04. | கடலிலே மிதந்த அப்பர் | 15 |
| 05. | தேவாரம் | 17 |
| 06. | நல்லூர்க் கந்தசுவாமி கோயில் | 19 |
| 07. | கொன்றை வேந்தன் | 21 |
| 08. | தேவாரம் | 23 |
| 09. | பிட்டுவாணிச்சி அம்மையார் | 25 |
| 10. | திருவாசகம் | 27 |
| 11. | கோயிலுக்குச் செல்லுதல் | 28 |
| 12. | கந்தசுவாமியாரும் ஔவையாரும் | 30 |
| 13. | சிவபெருமான் குண்டோதரனுக்கு அன்னம் இட்டருளியமை | 32 |
| 14. | வெவ்வேறு முறையான வழிபாடுகள் | 34 |
| 15. | புராணம் | 35 |
| 16. | பிள்ளையாரும் அகத்திய முனிவரும் | 36 |
| 17. | கொன்றை வேந்தன் | 38 |

பக்கம்


| | | |
|---|---|---|
| 18. | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் | 44 |
| 19. | கோவில்களுக்குச் செல்லுதல் | 46 |
| 20. | சரியை வழிபாடு | 47 |
| 21. | கோயிலைச் சுத்தம் செய்தல் | 48 |
| 22. | அப்பர் சுவாமிகள் தேவாரம் | 49 |
| 23. | சிவபிரான் கல்லானைக்குக் கரும்பு தீற்றியது | 52 |
| 24. | சிவபெருமான் பாலனாய்த் தொட்டிலிற் கிடந்தமை | 53 |
| 25. | சுந்தரமூர்த்தி நாயனார் | 55 |
| 26. | கந்தசுவாமியார் பிரமதேவனுக்குப் படிப்பித்தது | 59 |
| 27. | சிவபெருமான் மண் சுமந்தமை | 60 |
| 28. | திருவாசகம் | 62 |
| 29. | கௌசிக முனிவர் | 64 |
| 30. | பட்டினத்துப் பிள்ளையார் | 65 |
| 31. | யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோயில் | 67 |
| 32. | திருமந்திரப் பாடல் | 68 |
| 33. | திருமுருகாற்றுப்படை | 68 |
| 34. | திருப்புகழ் | 69 |
| 35. | உலகநீதி | 69 |



பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்

உ
சிவமயம்

# முதலாம் பாடம்

# சிவபெருமான் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தமை

இந்தியாவிலே மதுரை என்று ஓர் ஊர் உண்டு. அதற்குப் பக்கத்திலே ஒரு காடு இருந்தது. அந்தக் காட்டிலே ஒரு பன்றி வசித்தது. அது பன்னிரண்டு குட்டிகளை ஈன்றது.



சிவபெருமான் தாய்ப் பன்றியாய் வந்து குட்டிகளுக்குப் பால் கொடுத்தமை

ஒரு நாள் தாய்ப் பன்றி இரை தேடச் சென்றது. அங்கே வேடர்கள் அதனைக் கொன்று விட்டார்கள். குட்டிகள் தாயைக் காணாமல் வருந்தின; வெயிலிற் கிடந்து துடிதுடித்தன. அவைகளுக்குப் பசி யுண்டாயிற்று. பால் கிடையாமல் தவித்தன. அவை பட்ட துன்பம் சொல்ல முடியாது; அவ்வளவு வேதனைப்பட்டன.

எல்லாம் அறிபவராகிய சிவபெருமான், பன்றிக் குட்டிகள் படும் வேதனையை அறிந்தார். தாய்ப் பன்றியின் உருவத்தோடு அங்கே சென்றார். குட்டிகளுக்கு அருகிலே அன்போடு படுத்தார். அதனைக் கண்ட குட்டிகள் மகிழ்ந்தன; தமது தாயென எண்ணிப் பாலைக் குடித்தன; பசியும் தாகமும் தீர்ந்தன; மகிழ்ச்சியோடு தாயின்மேல் ஏறித்துள்ளி விளையாடின.

சிவபெருமான் எல்லா உயிர்களிலும் அன்பும் இரக்கமும் உடையவர். அவர் பன்றிக் குட்டிகளிலே இரக்கமும் அன்பும் கொண்டே தாய்ப் பன்றியாய் வந்தார். இந்த உலகத்தைப் படைத்தவர் அவரே. எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையும் அவரே.

சிவபெருமான் எம் மீது அதிக அன்புள்ளவர். ஈ, எறும்பு முதலிய எல்லா உயிர்களிலும் அன்பு உள்ளவர். நாமும் எல்லா உயிர்களிலும் அன்பு உள்ளவர்களாயிருத்தல் வேண்டும். அது சிவபெருமானுக்கு விருப்பமாயிருக்கும். அவருக்கு விருப்பமானதைச் செய்வதே நாம் அவருக்குச் செய்யும் பூசையாகும்.

## பயிற்சி

கீறிட்ட இடங்களிலே **பொருத்தமான** சொல்லை வைத்து நிரப்புக.

1. மதுரைக்குப் பக்கத்திலே ஒரு......................இருந்தது. அங்கே வசித்த ஒரு பன்றி பன்னிரண்டு......................ஈன்றது.

2. ஒரு நாள் அது காட்டுக்குள்ளே சென்ற போது.............................. அதனைக் கொன்றுவிட்டார்கள். குட்டிகள் பசியால் வருந்தின.

3. சிவபெருமான்.......................பன்றியாகி அங்கே வந்தார்.

4. குட்டிகள் மகிழ்ந்து........................குடித்தன.

5. சிவபெருமான் எல்லா உயிர்களிலும்..........................உள்ளவர்.

## இரண்டாம் பாடம்

# உமாதேவியார் குழந்தைக்குப் பால் கொடுத்தமை

தென்னிந்தியாவிலே சீகாழி என்று ஒரு தலம் உண்டு. அங்கே சிவபாதவிருதயர் என்னும் பிராமணர் ஒருவர் வசித்து வந்தார். அவருடைய மனைவியாரின் பெயர் பகவதியார். அவர்கள் சிவபெருமானிடத்திலே மிகுந்த பக்தி உடையவர்கள். அவர்கள் தினமும் சீகாழியிலுள்ள தோணியப்பரை வழிபட்டனர். தோணியப்பரது அருளினாலே அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது.



உமாதேவியார் குழந்தைக்குத் தமது திரு முலைப்பாலைக் கிண்ணத்திலிட்டு ஊட்டுதல்

குழந்தைக்கு மூன்று வயதாகிற்று. அப்பொழுது ஒருநாள் சிவபாதவிருதயர் வழக்கம் போலக் கோயிலுக்குப் போனார். குழந்தையும் அவருக்குப் பின்னே சென்றது. அவர் குழந்தையை வரவேண்டாமென்று தடுத்தார். குழந்தை அழுதது. அதனால் குழந்தையையும் கூட்டிச் சென்றார்.

கோயிலுக்குச் செல்வதற்கு முன் குளிக்க வேண்டியது அவசியம். அதனால் சிவபாதவிருதயர் கோயிலுக்குப் பக்கத்தி லிருந்த குளத்துக்குச் சென்றார். குழந்தை யைக் குளக் கரையிலே இருத்தினார். தாம் குளத்திலே இறங்கித் தண்ணீரிலே மூழ்கி, மூழ்கி நீராடினார்.

அப்போது, குழந்தை தகப்பனாரைக் காணாமல், 'அம்மே அப்பா' என்று சொல்லி அழுதது.அது தகப்பனாருக்குக் கேட்கவில்லை. ஆனால், உலக மாதாவாகிய உமாதேவியாருக்கும் சிவபெருமானுக்கும் கேட்டது. அது முற்பிறப்பிலே புண்ணியஞ் செய்த புண்ணியக் குழந்தை. ஆனபடியால், சிவபெருமான் உமாதேவியாருடன் குழந்தையின் முன் தோன்றினார். குழந்தை அவர்களைக் கண்டது.

உமாதேவியார் தமது திருமுலைப் பாலைக் கிண்ணத்திலிட்டுக் குழந்தைக்கு ஊட்டினார். உமாதேவியார் ஊட்டிய ஞானப்பாலைக் குழந்தை உண்டது. உடனே குழந்தையின் அழுகை நீங்கியது. அது மிகுந்த ஆனந்தம் கொண்டது. சிவபெருமானும் உமாதேவியாரும் மறைந்தருளினர்.

சிவபாதவிருதயர் நீராடிய பின் வெளியே வந்தார். குழந்தையைப் பார்த்தார். குழந்தையின் வாயிலே பால் வடிந்திருந்தது. "உனக்குப் பால் தந்தவர் யார்?" என்று கேட்டுக் குழந்தையை உறுக்கினார். குழந்தை தோணியப்பரது கோயிலைச் சுட்டிக்காட்டி "தோடுடைய செவியன்" என்னும் தேவாரத்தைப் பாடிற்று. சிவபாதவிருதயர் மிகவும் ஆச்சரியம் அடைந்தார். தமது குழந்தை ஒரு தெய்வக் குழந்தை என உணர்ந்தார். ஞானப்பால் உண்டமையால் குழந்தை ஞானசம்பந்தராயிற்று. இக்குழந்தையே திரு ஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஆவர்.

## பயிற்சி

1. அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களிற் **பொருத்தமான** சொல்லைத் தெரிந்து கீறிட்ட இடங்களில் நிரப்பி எழுதுக.

(ஞானப்பால்; அம்மே; அப்பா; தோடுடைய செவியன்; சீகாழி)

(அ) சிவபாதவிருதயர்..............................என்னும் ஊரிலே வசித்தார்.

(ஆ) குளக் கரையிலிருந்த குழந்தை.........................என அழுதது.

(இ) உமாதேவியார் குழந்தைக்கு............................ஊட்டினார்.

(ஈ) ஞானசம்பந்தர்.........................என்னும் தேவாரத்தை முதலிற் பாடினார்.

2. தோணியப்பரது கோயில் எங்கேயுண்டு ?

3. கோயிலுக்குச் செல்லுமுன் யாது செய்தல் வேண்டும் ?

## மூன்றாம் பாடம்

# தேவாரம் - 1

## 1. திருவலிவலம்

ஞானப்பால் உண்ட குழந்தையாகிய திருஞானசம்பந்தரைப் பற்றிப் படித்தோம். அவர் பல கோயில்களுக்கும் சென்று சிவபெருமானை வணங்கினார்; தேவாரங்கள் பாடித் துதித்தார்.

அவர் ஒருமுறை திருவலிவலம் என்னும் தலத்துக்குச் சென்றார். அங்கே உள்ள சிவபெருமானைத் தேவாரம் பாடி வணங்கினார். அந்தத் தேவாரங்களில் ஒன்று இங்கே இருக்கிறது.

**பிடியதன் உருவுமை கொளமிகு கரியது**
**வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்**
**கடிகண பதிவர அருளினன் மிகுகொடை**
**வடிவினர் பயில்வலி வலமுறை இறையே.**

(கணபதி - பிள்ளையார்; வலிவலம் - திருவலிவலம்)

திருவலிவலமென்னும் தலத்திலுள்ள சிவபெருமான் அடியவர்களுக்கு மிக்க அருளைச் செய்பவர். அவர் தம்மை வணங்கும் அடியவர்களது துன்பத்தை நீக்குவதற்காகப் பிள்ளையாரைத் தோன்றுமாறு அருள்செய்தார். அவரை வணங்குவோமாக என்பது இத் தேவாரத்தின் பொருள்.

## 2. திரு ஆலவாய்

திருஞானசம்பந்தர் ஒருமுறை பாண்டி நாட்டுக்குச் சென்றார். மதுரை, பாண்டி நாட்டின் தலைப்பட்டணம். அங்கே திருஞானசம்பந்தர் தங்கியிருந்தார். அப்பொழுது பாண்டிய அரசனுக்கு வெப்புநோய் உண்டானது. அதை ஒருவராலும் சுகப்படுத்த முடியவில்லை. அவன் மிகவும் துன்பப்பட்டான். அதனை அறிந்த திருஞானசம்பந்தர் அங்கே சென்றார். திருநீற்றை எடுத்துப் பாண்டியனின் தேகத்தில் பூசினார். ''மந்திரமாவது நீறு'' என்று தொடங்கும் தேவாரத்தைப் பாடினார். பாண்டியனது வெப்பு நோய் நீங்கிற்று.

**மந்திரமாவது நீறு வானவர் மேலது நீறு**
**சுந்தரமாவது நீறு துதிக்கப்படுவது நீறு**
**தந்திரமாவது நீறு சமயத்திலுள்ளது நீறு**
**செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆலவாயான் திருநீறே!**

(திருஆலவாய் - மதுரை; வானவர் - தேவர்; சுந்தரம் - அழகு)

சிவந்த பவளம் போன்ற வாயினையுடைய உமாதேவியாரை இடப்பக்கத்திலேயுள்ள சிவபெருமான் திருஆலவாயிலே உள்ளார். அவரது திருநீறு மந்திரமாயிருப்பது; தேவர்கள் தங்கள் மேல் அணியப் பெற்றிருப்பது; அது அழகுடையது; எல்லோராலும் வணங்கப்படுவது; முத்திக்கு உபாயமாவது; சமயங்களில் உள்ளது.

## பயிற்சி

விட்ட இடத்தை நிரப்பி எழுதுக.

1. பிடியதன் உரு..................................மிகு கரியது
   ....................................தனதடி வழிபடு மவரிடர்
   கடி............................வர அருளினன்......................
   வடிவினர் பயில்........................முறை...................

2. மந்திர.........................நீறு....................மேலது நீறு
   சுந்தர.........................நீறு...................................
   ...........................மாவது நீறு சமயத்தி..............
   செந்துவர் வாயுமை பங்கன்..................திருநீறே.

# நான்காம் பாடம்

## கடலிலே மிதந்த அப்பர்

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் வாழ்ந்த காலத்திலே திருநாவுக்கரசு நாயனார் என்பவரும் வாழ்ந்தார். அவர் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரிலும் வயதிற் கூடியவர். அதனால், திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருநாவுக்கரசரை "அப்பர்" என அழைத்தார். அதனால் அவருக்கு அப்பர் என்னும் பெயர் உண்டாயிற்று.

அப்பர் திருவாமூர் என்னும் இடத்திலே பிறந்தவர். பிறந்தபோது அவருடைய பெற்றோர் அவருக்கு மருணீக்கியார் எனப் பெயரிட்டார்கள். அவர் சிறுவராயிருக்கும் போதே அவருடைய பெற்றோர்கள் இறந்து விட்டார்கள். அதனால் அவரை அவரது தமக்கையார் வளர்த்து வந்தார். திலகவதியார் என்பது தமக்கையாரின் பெயர். அவர் சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தி உள்ளவர்.



தமக்கையார் திலகவதியாரிடம் சூலை நோயுற்றிருந்த தம்பியாராகிய தருமசேனர்

சில காலம் செல்ல மருணீக்கியார் சைவசமயத்தை விட்டுச் சமண சமயத்திலே சேர்ந்தார். சமணசமய நூல்களை நன்றாகப் படித்தார். பின்னர் சமணர்களுக்குச் சமயக் குரு ஆனார். அப்பொழுது அவருக்குத் தருமசேனர் என்னும் பெயர் வழங்கப்பட்டது.

தம்பியார் சமண சமயத்தைச் சேர்ந்தமையால், திலகவதியார் மனம் வருந்தினார். தம்பியை மறுபடியும் சைவ சமயத்திலே சேர்க்க விரும்பினார். திருவதிகையிலுள்ள சிவபெருமானை வணங்கித் தமது விருப்பத்தைக் கூறினார். அவரது விருப்பம் நிறைவேறும் நாள் வந்தது.

சமணருடன் வாழ்ந்த தருமசேனருக்குச் சூலை நோய் உண்டானது. அது மிகவும் பொல்லாத நோய். அந்த நோய் அவரை மிகவும் வருத்தியது. சமணர்களால் அதை நீக்க முடியவில்லை.

நோயின் கொடுமையைத் தாங்கமாட்டாத தருமசேனர் ஒருவருக்கும் தெரியாமல் தமக்கையாரிடம் வந்து சேர்ந்தார். தனது துன்பத்தைக் கூறினார். திலகவதியார் அவரைத் திருவதிகையிலுள்ள இறைவனிடம் அழைத்துச் சென்றார். விபூதி அணிந்து சுவாமியை வணங்குமாறு கூறினார். வணங்கியதும் அவருடைய நோய் நீங்கிற்று.



கல் தோணியாக மிதந்தது

தருமசேனர் மனம் மகிழ்ந்தார். தமக்கையாருக்கும் மகிழ்ச்சி உண்டானது. தனது நோயை நீக்கிய சிவபெருமானைத் தருமசேனர் பாடல்கள் பாடி வணங்கினார். அவருடைய பாடல்கள் அருமையான தேவாரங்களாயிருந்தன. அதனால் அவருக்கு நாவுக்கு அரசர் என்னும் பெயரும் உண்டானது.

தருமசேனர் சைவ சமயத்தைச் சேர்ந்தமையைச் சமணர்கள் அறிந்தார்கள். அதனால் அவர்கள் அவர்மேல் கோபங் கொண்டார்கள். அந்த நாட்டு அரசனிடம் கோள் மூட்டினார்கள். அரசனும் சமண சமயத்தவன். ஆனபடியால் சமணர் சொன்னவற்றை நம்பினான். திருநாவுக்கரசரை அழைத்துத் தண்டிக்க எண்ணினான்.

அர்சன் திருநாவுக்கரசரை அழைத்தான். சமணர் சொற்படி அவரைச் சுண்ணாம்பு அறையில் அடைத்தான். ஆனால், அவருக்கு வருத்தம் உண்டாகவில்லை. அதனால் அவன் அவருக்கு மேலும் பல துன்பங்கள் செய்தான். அப்பொழுதும் அவர் வருந்தவில்லை. இறுதியாக அவன் அவரைக் கல்லிலே கட்டிக் கடலிலே தள்ளும்படி கூறினான். அவ்வாறே அக்கொடிய சமணர்கள் அவரை ஒரு பாறாங்கல்லுடன் கட்டிக் கடலிலே தள்ளினார்கள்.

என்ன அதிசயம்! அந்தக் கல் கடலிலே தெப்பமாக மிதந்து அவரைத் தாங்கிற்று.

கல் தோணி போலக் கடலிலே மிதக்க திருநாவுக்கரசர் அதன்மேல் இருந்து கடவுளை வணங்கித் தேவாரங்கள் பாடினார். அது கரையை அடைந்தது.

## பயிற்சி

1. அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களிற் **பொருத்தமானவற்றைத் தெரிந்து,** விட்ட இடங்களை நிரப்பி வாசிக்க.:

(கல்லுடன்; சமண; தமக்கையார்; சூலை; சமணர்; அரசன்; கடலிலே; தருமசேனர்; திருவதிகையில்; நீங்கிற்று.)

மருணீக்கியாரை அவரது.............................. வளர்த்துவந்தார், அவர் சிலகாலம் செல்லச்................ சமயத்தைச் சேர்ந்தார். சமண சமயக் குரு ஆனார். அப்பொழுது அவருக்கு.....................என்று பெயர். பின்.......................நோய் உண்டானபடியால்..................... ரிடம் வந்தார்...............................உள்ள சுவாமியை வணங்கினார். சூலை நோய்......................... பின்னர்......................அவர் மீது கோபங்கொண்டார்கள். சமணர் சொற்படி.................................... நாவுக்கரசரை.................................கட்டி...........................தள்ளச் செய்தான். ஆனாலும் அவர்...........................மிதந்து வந்தார்.

## ஐந்தாம் பாடம்

# தேவாரம் - 2

சமண சமயத்தவனாகிய பல்லவ அரசன், அப்பர் சுவாமிகளைச் சுண்ணாம்பு அறையிலே அடைத்தான் எனப் படித்தோம். சுண்ணாம்பு அறை மிகவும் வெக்கையாய் இருக்கும். அதற்குள் அகப்பட்டவர்கள் வெப்பம் தாங்க மாட்டாமல் அவிந்துவிடுவார்கள். ஆனால் திருநாவுக்கரசரை அந்த வெக்கை அவிக்கவில்லை. திருநாவுக்கரசர் சுண்ணாம்பு அறையிலே இருந்து சிவபெருமானையே நினைந்து வணங்கினார். தேவாரங்கள் பாடித் துதித்தார். அதனால் அவர் சுகமாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தார். அவர் சுண்ணாம்பு அறையிலே பாடிய தேவாரம் ஒன்று கீழே இருக்கிறது.

### 1. தனித் திருக்குறுந்தொகை

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே.**

(மதியம் - சந்திரன்; பொய்கை - குளம்; எந்தை - எம்முடைய தந்தை)

சிவபெருமானுடைய திருவடி நிழல் வீணையின் ஓசையைப்போல இனிமையாய் இருந்தது. மாலைக் காலத்துச் சந்திரனைப் போலக் குளிர்மையாய் இருந்தது. தென்றல் காற்றைப் போலச் சுகத்தைக் கொடுத்தது. இளவேனிற் காலம் போலவும், வண்டுகள் மொய்க்கின்ற வாவிபோலவும் தண்மையாய் இருந்தது.

**அப்பர் சுவாமிகளாலே பாடப்பட்ட இன்னும் இரண்டு தேவாரங்கள் இங்கே உள்ளன. அவற்றையும் படித்துப் பாருங்கள்.**

### 2. கோயில் (சிதம்பரம்)

### திருக்குறுந்தொகை

**அன்னம் பாலிக்கும் தில்லைச்சிற்றம்பலம்**
**பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை**
**என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற**
**இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.**

(அன்னம் - உணவு; பாலித்தல் - கொடுத்தல்; தில்லை - சிதம்பரம்; பூமிசை பூமியில்; கோயில் - சிதம்பரம்;)

சிதம்பரத்திலுள்ள சிற்றம்பலத்தை அடைந்தவர்களுக்கு அது உணவைக் கொடுக்கும். அப்படிப்பட்ட தில்லைச்சிற்றம்பலத்தைக் கண்டு மகிழ விரும்புகிறேன். அதற்கு உதவியாகப் பூமியில் இன்னும் பல பிறவிகள் எனக்குக் கிடைக்குமா?

## 3. திருவங்கமாலை

நமக்குத் தலை, கை முதலிய அங்கங்கள் ஏன் கிடைத்தன தெரியுமா? கடவுளை வணங்குதற்காகவே அவை கொடுக்கப்பட்டன. கீழேயுள்ள பாடல் தலை என்ன செய்ய வேண்டும் என்பதைக் கூறுகிறது.

**தலையே நீ வணங்காய்!**
**தலைமாலை தலைக்கணிந்து**
**தலையாலே பலி தேரும் தலைவனைத்**
**தலையே நீ வணங்காய்!**

(வணங்காய் - வணங்கு; பலி - பிச்சை)

தலையே நீ வணங்கு; மண்டை ஓடுகளை மாலையாகக் கட்டித் தலையிலே சூடி, மண்டையோட்டிலே பிச்சை எடுக்கிற கடவுளைத் தலையே நீ வணங்கு.


**பயிற்சி**

பாடல்களை மனனஞ் செய்க.

### ஆறாம் பாடம்

# நல்லூர்க் கந்தசுவாமி கோவில்

நல்லூர், யாழ்ப்பாணப் பட்டணத்துக்கு அருகிலுள்ள ஓர் ஊர். யாழ்ப்பாணத்தை முற்காலத்திலே தமிழ் இராசாக்கள் ஆட்சி செய்தார்கள். அவர்களது மாளிகைகளும் நல்லூரிலேயே இருந்தன. அதனால், அவர்கள் கந்தசுவாமி கோவிலைக் கட்டினார்கள்; திருவிழாக்களையும் நித்திய பூசைகளையும் சிறப்பாக நடாத்தினார்கள். பின்னர் போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகிய பிற தேசத்தவர்கள் யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்தார்கள்.


நல்லூர் கந்தசாமி கோவில்

போர்த்துக்கீசரும், ஒல்லாந்தரும் கிறிஸ்தவ சமயத்தவர்கள். அவர்கள் தமது சமயத்தை யாழ்ப்பாணத்திலே பரப்ப எண்ணினார்கள். அதனால் அவர்கள் சைவசமயக் கோவில்களை இடித்தார்கள். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலையும் அழித்தார்கள். அதனால் சைவ சமய அடியார்கள் மிகவும் மனம் வருந்தினார்கள். தமது மனவருத்தத்தை நீக்கும்படி கடவுளை வேண்டினார்கள்.

சில காலஞ்செல்ல அந்த அடியவர்களது முயற்சியினாலே நல்லூரிலே கந்தசுவாமி கோயில் திரும்பவும் கட்டப்பட்டது. அக்கோயில் மிகவும் அழகானது. கிழக்கு வாயிலிலும் தெற்கு வாயிலிலும் அழகான கோபுரங்கள் இருக்கின்றன. கோயிலைச் சுற்றி உள்வீதி அமைந்துள்ளது. கோயிலின் வடக்குப் பாகத்தில் ஒரு பூந்தோட்டம் இருக்கிறது. இவற்றைச் சுற்றிவர அலங்காரமான மதில் உண்டு.

சுற்று மதிலுக்கு வெளியே வெளிவீதி இருக்கிறது. தெற்குப் பக்கத்திலும் மேற்குப் பக்கத்திலும் தெரு வீதிகளே வெளி வீதிகளாயிருக்கின்றன.

நல்லூர்க் கந்தசுவாமி கோயில் மிகவும் அழகான கோயில். இங்கே நித்திய பூசைகளும் திருவிழாக்களும் நியமம் தவறாமல் அவ்வவ் நேரங்களில் ஒழுங்காக நடைபெறும்.

கந்தப் பெருமான் கோயில் கொண்ட அந்தக் கோயிலிலே பிள்ளையார், ஆறுமுக சுவாமி, வள்ளியம்மன், தெய்வயானையம்மன், விஷ்ணு, பழனியாண்டி முதலிய திரு வுருவங்கள் எழுந்தருளி இருக்கின்றன.

நல்லூர்க் கந்தசுவாமி கோயிலில் ஆவணி மாதத்திலே திருவிழா நடைபெறும். திருவிழா இருபத்தைந்து தினங்கள் நடைபெறும். பத்தாந் திருவிழா மஞ்சத் திருவிழா. இருபத்துநான்காம் திருவிழா தேர்த்திருவிழா ஆகும். அடுத்த நாள் ஆவணி மாதத்து அமாவாசைத் தினமாகும். அன்று தீர்த்தத் திருவிழா நடைபெறும். தேர்த் திருவிழாவிற்கும் தீர்த்தத் திருவிழாவிற்கும் இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் அடியார்கள் செல்வார்கள்.

பிள்ளைகளே, நீங்களும் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலுக்குப் போய் வணங்கினால் முருகப்பெருமான் உங்களுக்கு அனுக்கிரகம் செய்வார்.

## பயிற்சி

1. கீறிட்ட இடங்களை நிரப்பி வாசிக்க.

(அ) நல்லூர்க் கந்தசுவாமி கோவிலில்..............................நாள்கள் திருவிழா நடைபெறும். இருபத்துநான்காம் திருவிழா.....................திருவிழாவாகும்.

(ஆ) கோயிலின்................................பக்கத்திலும் தெற்குப் பக்கத்திலும் கோபுரங்கள் இருக்கின்றன.

(இ) பூந்தோட்டம் கோயிலின்............................திசையில் இருக்கிறது.

2. கோயிலிலே காணப்படும் திருவுருவங்கள் சில கூறுக.



## ஏழாம் பாடம்

# கொன்றை வேந்தன் -1

கொன்றை என்பது ஒரு மரம். அதன் பூக்கள் கொத்து கொத்தாக இருக்கும். அடியார்கள் அவற்றை மாலையாக்கிச் சிவபெருமானுக்கு அணிவார்கள். அதனால், சிவபெருமானுக்குக் கொன்றை வேந்தன் எனவும் பெயர் உண்டு.

"கொன்றை வேந்தன்" என்னும் பெயருடைய ஒரு புத்தகமும் உண்டு. அதனை ஔவையார் என்னும் புலவர் பாடினார். அவர் கொன்றை வேந்தனாகிய சிவபெருமானை முதலில் வணங்கி இதனைப் பாடினார். அதனால் கொன்றை வேந்தன் என இப்புத்தகத்துக்குப் பெயர் உண்டானது.

**கொன்றை வேந்தன் செல்வன் அடியிணை**
**என்று மேத்தித் தொழுவோம் யாமே.**

(சிவபெருமானுக்கு மகனாராகிய விநாயகருடைய பாதங்களிரண்டினையும் எப்பொழுதும் வணங்குவோமாக.)

1. **அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்**
தாயும் தந்தையும் நாம் முதலிற் கண்டு வணங்கும் தெய்வங்களாவர்.

2. **ஆலயம் தொழுவது சாலவும் நன்று.**
கோயிலை வணங்குவது மிகவும் நல்லது.

3. **இல்லறமல்லது நல்லற மன்று.**
இல்லறமே எளிதிற் செயத்தகும் அறமாகும்

4. **ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.**
தருமம் செய்யாத உலோபிகளுடைய சம்பாத்தியத்தைக் கள்வர் முதலிய தீயவர்கள் அபகரிப்பார்கள்,

5. **உண்டி சுருங்குதல் பெண்டிர்க் கழகு.**
உண்ணும் உணவு (அளவிலே) குறைதல் பெண்களுக்கு அழகாகும்.

6. **ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.**
ஊரிலுள்ளவர்களுடன் பகைத்தால் குடி வமிசத்துடன் அழியும்.

7. **எண்ணும் எழுத்தும் கண்ணெனத் தகும்.**
கணிதமும் இலக்கணமும் மனிதனுக்குக் கண்களைப் போன்றவை.

8 **ஏவா மக்கள் மூவா மருந்து.**
தாமாகவே செய்ய வேண்டியவற்றைக் குறிப்பறிந்து செய்யும் பிள்ளைகள் தாய், தந்தையருக்குத் தேவாமிர்தம் போல்வர்.

9. **ஐயம் புகினும் செய்வன செய்.**
பிச்சை எடுத்தாயினும் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்.

10. **ஒருவனைப் பற்றி ஓரகத்திரு.**
நற்குணமுடைய ஒருவனை (த் துணையாகப்) பற்றிக் கொண்டு ஓரிடத்திலே தானே வாசம் பண்ணு.

11. **ஓதலின் நன்றே வேதியர்க்கு ஒழுக்கம்.**
பிராமணர்களுக்கு ஆசாரமானது (வேதம்) ஓதுதலினும் சிறந்ததாகும்.

12. **ஔவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.**
பொறாமை வார்த்தைகளை ஒருவன் பேசுதல் (அவன்) செல்வத்திற்குக் கேட்டைத் தருவதாகும்.

13. **அஃகமும் காசும் சிக்கெனத் தேடு.**
தானியத்தையும் பணத்தையும் நீ வீண் செலவு செய்யாமற் சம்பாதி.

## பயிற்சி

இப் பகுதிப் பாடல்களை மனனஞ் செய்க.

## எட்டாம் பாடம்

# தேவாரம் - 3

நாங்கள் முந்திய பாடங்களில் இரண்டு நாயன்மார்களின் கதைகளைப் படித்திருக்கிறோம். திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசு நாயனார் ஆகிய அவ்விருவரும் பாடிய சில தேவாரங்களையும் படித்திருக்கிறோம்.

தேவாரம், திருவாசகம் ஆகிய தோத்திரங்களைப் பாடிய சமய குரவர்கள் நால்வர். அவர்களுள் இருவருடைய பெயர்களை உங்களுக்குத் தெரியும். மற்றையவர்கள் இருவர். அவர்களுடைய பெயர் முறையே சுந்தரமூர்த்தி நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் என்பனவாகும்.

சுந்தரமூர்த்தி நாயனாராற் பாடப்பட்ட மூன்று தேவாரங்கள் கீழே இருக்கின்றன. அவற்றுள் முதலாவது பாடல் திருவெண்ணெய் நல்லூர் என்னுமிடத்திலே பாடப்பட்டது. அது,

## 1. திருவெண்ணெய் நல்லூர்

**பித்தாபிறை சூடிப்பெரு மானேயரு ளாளா**
**எத்தால்மற வாதேநினைக் கின்றேன் மனத்துன்னை**
**வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட் டுறையுள்**
**அத்தா உனக் காளாயினி அல்லே னெனலாமே.**

பித்தரே, பிறையை அணிந்தவரே, பெருமானே, இரக்கம் உள்ளவரே, பெண்ணை நதிக்குத் தெற்கே அமைந்த திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திருவருள்துறை என்னும் கோயிலின்கண் உறைகின்ற தந்தையே, எனது நெஞ்சத்துள் உம்மை அகலாது வைத்தருளுனீர், உமக்கு முன்பே அடிமையான நான் இப்போ அடிமையல்லேன் என்று எதிர் வழக்குப் பேச முடியுமா?

## இது இன்னும் ஒரு பாடல்

## 2. திருமழபாடி

**பொன்னார் மேனியனே**
**புலித்தோலை அரைக் கசைத்து**
**மின்னார் செஞ்சடை மேல்**
**மிளிர் கொன்றை அணிந்தவனே**
**மன்னே மாமணியே**
**மழபாடியுள் மாணிக்கமே**
**அன்னே உன்னையல்லால்**
**இனி யாரை நினைக்கேனே.**

பொன்னைப் போன்ற சிவந்த திருமேனியை உடையவரே, புலியினது தோலை அரையிலே கட்டிச் சடையின்மேல் கொன்றை மாலையை அணிந்தவரே, தலைவரே, மணி போன்றவரே, மழபாடியுள் கோயில் கொண்ட மாணிக்கம் போன்றவரே, தாயானவரே. உம்மையல்லால் நான் வேறு யாரை நினைப்பேன்?

**பின்வரும் பாடலும் சுந்தரமூர்த்தி நாயனாரால் பாடப்பட்டது.**

## 3. திருநறையூர்ச் சித்தீச்சரம்

**கரியின் உரியும் கலைமான் மறியும்**
**எரியும் மழுவும் உடையான் இடமாம்**
**புரியும் மறையோர் நிறைசொற் பொருள்கள்**
**தெரியும் நறையூர்ச் சித்தீச் சரமே.**

யானையின் தோலாலான உடையையும், இளம் கலை மானையும், நெருப்பையும், மழுவையும் உடைய சிவபெருமானது இடம், தமது கடமைகளை விரும்பிச் செய்யும் பிராமணர் நிறைந்த சொற்களின் பொருளை ஆராய்கின்ற திருநறையூரிலுள்ள சித்தீச்சரம் என்னும் திருக்கோயிலிலே, என்றவாறாம்.

**பயிற்சி**

பாடல்களை மனனஞ் செய்க.

## ஒன்பதாம் பாடம்

# பிட்டு வாணிச்சி அம்மையார்

மதுரைக்குப் பக்கத்திலே வைகை என்னும் ஆறு பாய்கிறது. அது ஒரு முறை பெருக்கெடுத்தது. பெருகிய வெள்ளம் ஊருக்குள்ளே புகுந்தது. அப்போது அது ஆடு, மாடுகளையும், பொருள் பண்டங்களையும் அள்ளிக்கொண்டு போனது. சனங்கள் எல்லோரும் அல்லோலகல்லோலப் பட்டார்கள். அரசனிடம் சென்று முறையிட்டார்கள்.



**சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமத்தல்**

சிவபெருமானாகிய கூலியாள் மண்சுமக்கப் பிட்டு வாங்கி உண்ணுதல்

அரசன் ஆற்றின் கரையை உயர்த்தும்படி நாட்டு மக்களுக்குக் கட்டளையிட்டான். ஊரிலுள்ள ஒவ்வொரு வீட்டினருக்கும் ஒவ்வொரு பங்கு அளந்து விடப்பட்டது. சனங்கள் எல்லோரும் கூடையும் மண்வெட்டியும் கொண்டு ஆற்றங்கரைக்குப் போனார்கள். வைகைக்கரையிலே மண்ணைக் கொட்டிக் கரையை உயர்த்தினார்கள்.

மதுரையிலே செம்மனச்செல்வி என்னும் ஓர் அம்மையாரும் இருந்தார். அவர் வயது சென்ற ஒரு கிழவி; மிகவும் வறியவர்; அவருக்கு உறவினர் ஒருவரும் இல்லை. ஒரு குடிசையில் அவர் தனியே வாழ்ந்து வந்தார். பிட்டு அவித்து அதனை விற்றுச் சீவியம் செய்து வந்தார். எனினும் சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தி உள்ளவர். தினமும் கோயிலுக்குச் சென்று கடவுளை வணங்குபவர். அவரும் வைகையாற்றங் கரையின் ஒரு பகுதியைக் கட்ட வேண்டியிருந்தது.

இந்தக் கிழவியால் அணைகட்ட முடியுமா? ஆனாலும் அரசனது கட்டளையை மீற முடியாது. என்ன செய்வார் பாவம்!

வீட்டை விட்டு வெளியே புறப்பட்டார். கோலையூன்றிக் கொண்டு தள்ளாடித் தள்ளாடி நடந்தார். யாராவது கூலிக்காரர் அகப்படுவார்களா எனப் பார்த்தார். ஒருவரும் அகப்படவில்லை. என்ன செய்யலாமென எண்ணினார். "திக்கற்றவர்களுக்குத் தெய்வமே துணை" என்று நினைத்தார். உடனே மதுரையிலே உள்ள சொக்கநாதர் கோயிலுக்கு விரைந்து சென்றார்.

"சுவாமி, ஏழையாகிய எனக்கு உதவி செய்வார் ஒருவரும் இல்லை. நீரே எனக்குத் துணை. நீர் உதவி செய்யாவிட்டால் என் துன்பத்தை வேறு யார் நீக்குவார்" என்று முறையிட்டு அழுதார். அந்த அழுகை வீண் போகவில்லை.

சிவபெருமான் ஒரு கூலியாளரானார். கந்தைத் துணியுடுத்திக் கூடையுடனும் மண்வெட்டியுடனும் வந்தார். அம்மையாரின் முன்னே "யாருக்காவது கூலியாள் வேண்டுமா?" என்று சத்தமிட்டபடியே சென்றார். அம்மையாரின் மனம் மகிழ்ந்தது. சிவபெருமானுடைய கிருபையைப் போற்றினார். கூலியாளராக வந்த சிவபெருமானிடம் தன் பங்கைக் கட்டித் தரும்படி கேட்டார்.

கூலியாளர் "எனக்குப் பசிக்கிறது" என்று கூறினார். செம்மனச் செல்வியார் கூலியாளரைத் தமது குடிசைக்குக் கூட்டிச் சென்றார். அங்கே தாம் அவித்த பிட்டைக் கொடுத்தார். கூலியாளர் பிட்டைப் பெற்று உண்டபடியே, "தாயே, உன் பிட்டு மிகவும் நன்று, நன்று" என்று சொன்னார். பிட்டினை உண்ட பின்னர் செம்மனச் செல்வியாரின் பங்கைக் கட்டச் சென்றார்.

## பயிற்சி

1. செம்மனச் செல்வியார் எங்கே வசித்தார்?

2. கீறிட்ட இடங்களிலே **பொருத்தமான** சொல்லை வைத்து வாசிக்க.

   (அ) செம்மனச் செல்வியார் மதுரையிலுள்ள......................நாதர் கோயிலுக்குச் சென்றார்

   (ஆ) சிவபெருமான்..........................வடிவங் கொண்டு செம்மனச் செல்வியார் முன் தோன்றினார்.

   (இ) கூலியாளராகிய சிவபெருமான் "எனக்குப்............................"என்று கூறினார்.

   (ஈ) "தாயே உனது பிட்டு மிகவும் ............................." என்று சொல்லிப் பிட்டை உண்டார்.

## பத்தாம் பாடம்

# திருவாசகம்

வைகையாற்றுக்குச் சிவபெருமான் அணைகட்டச் சென்ற கதையை முந்திய பாடத்திற் படித்தோம். அந்த வைகையாறு பெருகியதற்கு அந்த நாட்டு அரசனே குற்றவாளி. அவன் பாண்டிய அரசன். அவனுடைய முதல் மந்திரியார் மாணிக்கவாசக சுவாமிகள்.

ஒருமுறை பாண்டிய அரசன் மாணிக்கவாசகரைத் துன்பப்படுத்தினான். அதனாலேயே வைகைநதி பெருகிற்று. பின்னர் பாண்டியன் தன் பிழையை உணர்ந்து அவரிடம் மன்னிப்புக் கேட்டான். அதன் பின் வைகையின் பெருக்குத் தணிந்தது.

மாணிக்கவாசக சுவாமிகள் சைவ சமய குரவர் நால்வரில் ஒருவர் என்று முன்னே படித்தோம் அல்லவா? மாணிக்கவாசக சுவாமிகளாற் பாடப்பட்ட தோத்திரங்கள் **திருவாசகம்** எனப்படும். அவற்றுள் ஒன்று கீழே இருக்கிறது.

**பூசுவதும் வெண்ணீறு**
**பூண்பதுவும் பொங்கரவம்**
**பேசுவதும் திருவாயால்**
**மறைபோலும் காணேடி**
**பூசுவதும் பேசுவதும்**
**பூண்பதுவும் கொண்டென்னை**
**ஈசனவன் எவ்வுயிர்க்கும்**
**இயல்பானான் சாழலோ!**

இறைவன் தம் திருமேனியில் பூசிக் கொள்வது வெண்ணீறாகும். ஆபரணமாக அணிவது சீறுகின்ற பாம்பாகும். தமது திருவாயால் பேசுவது வேதமாகும். இவ்வாறு பூசுவதும் பேசுவதும் அணிவதும் ஆகிய செயல்களைச் செய்து என்ன பயன்? இறைவன் உயிர்கள் எல்லாவற்றுக்கும் அவ்வவற்றுக்குத் தக்க பயன் அளிக்கின்றான்.

இயல்பு - தகுதி, பயன்

## பயிற்சி

பாடலை மனனஞ் செய்தல்.

## பதினொராம் பாடம்

# கோயிலுக்குச் செல்லுதல்

கடவுள் எங்கும் இருக்கிறார். அவரை எவ்விடத்திலும் வணங்கலாம். ஆயினும் கடவுளைக் கோயிலிலேயே வணங்குதல் நன்று.

பசுவினது இரத்தத்திலிருந்தே பால் உண்டாகிறது. இரத்தம் பசுவினது உடல் முழுவதும் பரந்திருக்கிறது. ஆயினும், நாம் பாலைப் பசுவின் மடியிலிருந்தே பெறுகிறோம்.

அதுபோலவே, கடவுள் எங்கும் இருந்தாலும், கோயிலுக்குச் சென்று வணங்குதலே சிறந்தது. அதனாலேயே இறைவனுடைய அருள் எமக்குக் கிடைக்கும்.

நாம் தினமும் ஆலயம் சென்று இறைவனைத் தொழுதால் பல நன்மைகள் உண்டாகும். எந்த நேரத்திலும் நாம் கடவுளை வணங்கலாம். ஆயினும் காலையும் மாலையுமே கடவுளை வணங்குவதற்குச் சிறந்த நேரங்களாகும்.

தினமும் கோயிலுக்குச் செல்ல முடியாதவர் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலாவது போதல் வேண்டும். பூரணை, அமாவாசை, மாதப் பிறப்பு, வருடப் பிறப்பு முதலிய விசேட நாள்களிலும் கோயிலுக்குச் சென்று வணங்குதல் வேண்டும்.

கோயிலுக்குப் போவதற்குமுன் நீராடுதல் வேண்டும். தோய்த்து உலர்ந்த ஆடையை உடுக்க வேண்டும். கடவுளை மனத்திலே தியானித்து 'சிவ, சிவ' என்று சொல்லி, விபூதி பூசுதல் வேண்டும். தேவார, திருவாசகங்களைப் பாடிக் கொண்டு கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும்.

கோயிலுக்குப் போகும் போது பால், இளநீர், பூ, பழம், வெற்றிலை, பாக்கு, கர்ப்பூரம் முதலியவற்றைக் கொண்டு செல்லுதல் வேண்டும். அப் பொருள்களைச் சுத்தமான தாம்பாளத்திலே அல்லது கூடையிலே வைத்து எடுத்துக் கொண்டு செல்வது நன்று. அக்கூடையைக் கீழே தூங்கப் பிடியாது அரைக்கு மேலே தூக்கிச் செல்லுதல் வேண்டும்.

கோயிலுக்குப் போகும்போது கோபுரத்தைக் கண்ட உடனேயே வணங்குதல் வேண்டும். கை, கால்களைக் கழுவியபின் அருச்சனைக்குரிய பொருள்களைத் தண்ணீர் தெளித்துச் சுத்தப்படுத்துதல் வேண்டும். வாசலிலே நின்று நந்தி பகவானை வணங்கிக் கொண்டு கோயிலுக்குள் செல்லுதல் வேண்டும்.

## பயிற்சி

1. கடவுளை எங்கே வணங்குவது நல்லது?

2. பொருத்தமான சொல்லைச் சேர்த்து வாசிக்கவும்.

   (அ) நாம் கோயிலுக்குப் போகுமுன்..................................வேண்டும்.

   (ஆ) கோயிலுக்குப் போகும் போது............................பூ, பழம்,.......................................... முதலியவற்றைக் கொண்டு போதல் வேண்டும்.

   (இ) கோயிலுக்குக் கொண்டு போகும் பொருள்களை..............................மேலே தூக்கிச் செல்லுதல் வேண்டும்.



## பன்னிரண்டாம் பாடம்

# கந்தசுவாமியாரும் ஔவையாரும்

முற்காலத்திலே தமிழ் நாட்டிலே புலவர்கள் பலர் இருந்தார்கள். அவர்களுள் **ஔவையார்** என்னும் புலவரும் இருந்தார். அவர் ஒரு பெண் புலவர். வயதில் முதிர்ந்தவர். அவர் கந்தசுவாமியாரிடத்திலே மிகுந்த பக்தியுள்ளவர். அவரே ஆத்திசூடி, கொன்றை வேந்தன் முதலிய நூல்களை இயற்றியவர்.



ஔவையார்

ஔவையார் ஓரிடத்திலே தங்கியிருப்பதில்லை. பல ஊர்களுக்கும் செல்வார். அவர் தமது கைத்தடியை ஊன்றியபடி நடந்தே செல்லுவார். களைப்பு வந்துவிட்டால் வந்த இடத்திலேயே தங்கிவிடுவார். அவரை அதிகமாக எல்லோருக்கும் தெரியும். அவரை எல்லோரும் உபசரிப்பார்கள்.

ஔவையார் ஒரு நாள் காட்டு வழியே நடந்து சென்றார். வெயில் அதிகமாக இருந்தது. அதனால் அவர் களைத்துப் போனார். தாகமும் அதிகரித்தது. பசியும் உண்டானது. அவரால் நடக்க முடிய வில்லை. பக்கத்தில் நின்ற ஒரு நாவல் மரத்தின் கீழே இருந்தார்.

நாவல் மரத்திலிருந்து சில நாவற்பழங்கள் கீழே விழுந்தன. நிமிர்ந்து பார்த்தார். ஒரு சிறுவன் மரத்தின் மேலே நின்றான். அச்சிறுவன் நாவற்பழம் தின்பதை ஔவையார் கண்டார். "தம்பி, எனக்கும் நாவற்பழம் போடுவாயா?" என்று கேட்டார்.

"பாட்டி, பாட்டி! உனக்குச் சுட்டபழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா?" என்று சிறுவன் கேட்டான். ஔவையாருக்கு ஒன்றும் விளங்கவில்லை. ஆனாலும் "சுட்டபழம் போடு" என்றார்.

சிறுவன் நன்றாகப் பழுத்த பழங்களைப் பிடுங்கினான். அவற்றைக் கீழேயுள்ள மணலிலே எறிந்தான். ஔவையார் அவற்றைப் பொறுக்கினார். அந்தப் பழங்களிலே மணல் ஒட்டியிருந்தது.



ஔவையார் கந்தசுவாமியாராகிய சிறுவனிடம் நாவற்பழங்கள் தரும்படி கேட்டல்

மணலைப் போக்க அவற்றை வாயால் ஊதினார்.

"பாட்டி, பழம் சுடுகிறதா? நன்றாக ஊதிச் சாப்பிடு", என்றான் சிறுவன். அப்பொழுது தான் ஔவையாருக்குச் சுட்ட பழம் என் பதன் பொருள் விளங்கிற்று. அவர் வெட்கிப்போனார்.

ஔவையார் சிறுவனுடைய புத்தியை மெச்சினார். "தம்பி, நீ யார்?" என்று கேட்டார்.

"என்னை உனக்குத் தெரியாதா பாட்டி?" என்று சிறுவன் கூறினான். அப்பொழுது ஔவையார் சிறுவனைப் பார்த்தார். அங்கே பச்சை மயிலிலே கந்தசுவாமியார் தோன்றினார்.

கந்தசுவாமியாரே சிறுவனாக வந்தார். என்பதை அறிந்த ஔவையார் மனமுருகி அவரை வணங்கினார்.

**பயிற்சி**

1. ஔவையார் பாடிய இரண்டு நூல்களைக் கூறுக.

2. ஔவையார் பாடிய பாடல் ஒன்றை எழுதுக.

3. நாவற் பழம் தின்ற சிறுவன் யார்?

4. சுட்ட பழம் என்றால் என்ன?

### பதின்மூன்றாம் பாடம்

# சிவபெருமான் குண்டோதரனுக்கு அன்னம் இட்டருளியமை

முன்னொரு காலத்திலே பாண்டி நாட்டை மலயத்துவசன் என்னும் அரசன் ஆட்சி செய்தான். அவன் சிவபெருமானிடத்தில் மிகுந்த பக்தி உள்ளவன். அவனுக்குப் பிள்ளைகள் இல்லை. அதனால் அவன் சிவபெருமானுக்குப் பல பூசைகள் செய்தான்.



சிவபெருமான் குண்டோதரனுக்கு அன்னம் இட்டருளுதல்

மலயத்துவசனது விருப்பம் நிறைவேறிற்று. அவனுக்கு ஒரு பெண் குழந்தை கிடைத்தது. உமாதேவியாரே அவனுக்கு மகளாய்ப் பிறந்தார். குழந்தைக்குத் தடாதகை எனப் பெயரிட்டான்.

குழந்தை வளர்ந்தது. அது சிவபெருமானைத் தினமும் பூசை செய்தது. தன்னை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனப் பிரார்த்தித்தது. பிரார்த்தனையை நிறைவேற்றச் சிவபெருமான் இசைந்தார்.

தடாதகைப் பிராட்டியாருக்கும் சிவபெருமானுக்கும் திருமணம் நடந்தது. திருமணத்துக்குப் பெருந்தொகையான உணவு வகைகள் செய்யப்பட்டன. அந்த உணவுகளில் ஏராளமானவை மிஞ்சிக் கிடந்தன. அதனால். தடாதகைப் பிராட்டியார் வருந்தினார்.

தடாதகைப் பிராட்டியாரின் வருத்தத்தைச் சிவபெருமான் அறிந்தார். தன்னுடன் வந்த குண்டோதரனுக்குப் பெரும் பசியை உண்டாக்கினார். அவன் "சுவாமி, பசிக்கிறது" என்று சிவபெருமானிடம் கூறினான்.

சிவபெருமான் குண்டோதரனுக்கு உணவு கொடுக்குமாறு பிராட்டியாரிடம் கூறினார். பிராட்டியார் மகிழ்சியுடன் அவனுக்கு அன்னமிட்டார்.

அவன் உணவு முழுவதையும் உண்டான். மலை மலையாகக் கிடந்த சோற்றை உண்டான். அண்டாக்களிலே கிடந்த சோறு முழுவதையும் சாப்பிட்டான். கறி வகைகளை உண்டான். பலகாரம், பால், தயிர், நெய், தேன் எதுவும் மிஞ்சவில்லை. எல்லா உணவுகளும் முடிந்தன.

ஆயினும் குண்டோதரன் "பசிக்கிறது, பசிக்கிறது" என்று சத்தமிட்டான்.

பிராட்டியாருக்கு என்ன செய்வது என்று தோன்றவில்லை. சிவபெருமானிடம் முறையிட்டார்.

சிவபெருமானுடைய அருளினாலே சோறு வந்து கொண்டேயிருந்தது. குண்டோதரன் உண்டு பசியாறினான். அதனைக் கண்ட பிராட்டியார் மனம் மகிழ்ந்து சிவபெருமானை வணங்கினார்.

**பயிற்சி**

1. தடாதகைப் பிராட்டியார் யாருடைய மகள்?

2. குண்டோதரன் என்பவன் யாவன்? அவனுடைய பசி எப்படி ஆறியது?

3. தடாதகைப் பிராட்டியாருக்கு முதலில் மனவருத்தம் உண்டானது ஏன்?

## பதினான்காம் பாடம்

# வெவ்வேறு முறையான வழிபாடுகள்

கோயிலுக்கு எப்படிச் செல்ல வேண்டும் என்பதை முன்னொரு பாடத்திலே படித்தோம். கோயிலுக்குச் சென்றவுடன் முதலில் நந்தி தேவரை வணங்குதல் வேண்டும். பின்னர் கோயிலுக்குட் சென்று மூலத்தானக் கடவுளை வணங்கிக் கொண்டு பிள்ளையார் சந்நிதிக்குச் செல்லுதல் வேண்டும். இங்கே விரல்களை மடக்கி முட்டியாகப் பிடித்த இரண்டு கைகளினாலும் நெற்றியிலே மூன்று முறை குட்டுதல் வேண்டும். பின்னர் வலக்காதை இடக்கையினாலும் இடக்காதை வலக்கையினாலும் பிடித்து மூன்று முறை தாழ்ந்து எழுந்து கும்பிடுதல் வேண்டும்.

பிள்ளையாரை வணங்கிய பின், உமாதேவியார், கந்தசுவாமியார், வீரபத்திரர் முதலிய மூர்த்திகளை வணங்குதல் வேண்டும். வணங்கும்போது இரண்டு கைகளையும் கூப்பி மார்புடனாவது சிரசிலாவது வைத்து வணங்குதல் வேண்டும்.

கோயில்களிலுள்ள மூர்த்திகளை வணங்கிய பின் கைகளைக் குவித்துக்கொண்டு வீதியை வலம் வருதல் வேண்டும். இவ்வாறு மூன்று முறையாயினும் செய்தல் வேண்டும். அப்பொழுது தேவாரம், திருவாசகம் முதலிய அருட்பாடல்களைப் பாடுதல் வேண்டும். பின்னர் சந்நிதானத்தில் ஆண்கள் **அட்டாங்க** நமஸ்காரமும், பெண்கள் **பஞ்சாங்க** நமஸ்காரமும் செய்தல் வேண்டும்.

தலை, கைகள் இரண்டு, காதுகள் இரண்டு, தோள்கள் இரண்டு, மோவாய் ஆகிய எட்டு உறுப்புக்களும் நிலத்திலே பொருந்த வணங்குவது **அட்டாங்க நமஸ்காரமாகும்.**

தலை, முழந்தாள்கள் இரண்டு, கைகள் இரண்டு முதலிய, ஐந்து உறுப்புக்கள் நிலத்திலே பொருந்த வணங்குவது **பஞ்சாங்க நமஸ்காரம்** எனப்படும்.



**அட்டாங்க நமஸ்காரம்**



**பஞ்சாங்க நமஸ்காரம்**

இவ்வாறு வணங்கிய பின் கோயிலிலே ஓரிடத்தில் இருந்து அருட் பாடல்களைப் பாடுதல் வேண்டும்.

கோயிலிற் பூசை நடைபெறும் போது ஒழுங்காக நின்று சுவாமியை வணங்குதல் வேண்டும்.

கோயிலிலே கடைசியாக வணங்க வேண்டியவர் சண்டேசுரரே.

சிவனடியார்கள் விசேட திருவிழாக் காலங்களில் வீதியை அங்கப் பிரதட்சணம் செய்து வணங்குவார்கள்.

### பயிற்சி

1. அட்டாங்க நமஸ்காரம் எப்படிச் செய்தல் வேண்டும்?
2. பஞ்சாங்க நமஸ்காரம் எப்படிச் செய்தல் வேண்டும்?
3. அங்கப் பிரதட்சணமாவது யாது?
4. முதலில் யாரை வணங்குதல் வேண்டும்?
5. பிள்ளையாரை எப்படி வணங்குதல் வேண்டும்?.

## பதினைந்தாம் பாடம்

## புராணம்


கோயில்களிலே தேவாரம், திருவாசகம் பாடிய பின்னர் புராணம் பாடுவார்கள். பெரிய புராணம், கந்தபுராணம் முதலிய பாடல்களை அதிகமாக நாம் பாடுகிறோம். பெரிய புராணம் சேக்கிழார் சுவாமிகளால் பாடப்பட்டது. கந்த புராணம் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளால் பாடப்பட்டது. அப்பாடல்களில் ஒவ்வொன்று கீழே தரப்படுகிறது.

### 1. பெரிய புராணம்

**உலகெ லாம்உ ணர்ந் தோதற் கரியவன்**
**நிலவு லாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்**
**மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.**

சிவபெருமான் உலகத்திலுள்ளவர்களால் இப்படிப்பட்டவரென்று சொல்ல முடியாதவர். மூன்றாம் பிறைச் சந்திரனையும் கங்கா நதியையும் அணிந்த சடையை உடையவர். அளவில்லாத ஒளி ரூபமானவர். சிதம்பரத்திலே நடனம் செய்பவர். அவரது திருப்பாதங்களை வணங்குவாம்.

நிலவு - சந்திரன்; வேணி - சடை; அம்பலம் - சிதம்பரம்.



சேக்கிழார் சுவாமிகள்

### 2. கந்த புராணம்

**மூவிரு முகங்கள் போற்றி**
**முகம்பொழி கருணை போற்றி**
**ஏவருந் துதிக்க நின்ற**
**ஈராறு தோள்கள் போற்றி காஞ்சி**
**மாவடி வைகும் செவ்வேள்**
**மலரடி போற்றி அன்னான்**
**சேவலும் மயிலும் போற்றி**
**திருக்கைவேல் போற்றி! போற்றி.**

முருகப் பெருமானது ஆறு திருமுகங்களுக்கும் வணக்கம். அவரது திருமுகத்திலிருந்து பொழிகின்ற கருணைக்கும் வணக்கம். எல்லோரும் வணங்கு கின்ற பன்னிரண்டு தோள்களுக்கும் வணக்கம். காஞ்சிபுரத்திலுள்ள மாமரத்தின்கீழ் எழுந்தருளியுள்ள முருகனது திருப்பாத மலர்களுக்கும் வணக்கம். அவரது சேவற் கொடிக்கும், மயில் வாகனத்துக்கும் வணக்கம். அவரது திருக்கையிலுள்ள வேலுக்கும் வணக்கம்; வணக்கம்.

கருணை - அருள்; செவ்வேள் - முருகன்

### பயிற்சி

இப் பாடல்களை வரி பிழைக்காமல் எழுதுக.

### பதினாறாம் பாடம்

# பிள்ளையாரும் அகத்திய முனிவரும்

முன்னொரு காலத்திலே அகத்தியர் என்னும் முனிவர் ஒருவர் இருந்தார். அவர் உருவத்திற் சிறியவர்; தவத்தாற் பெரியவர். சிவபெருமானிடத்திலே அதிக பக்தி உடையவர். வட நாட்டிலே வசித்தவர்.

ஒருமுறை அகத்தியர் தென் நாட்டுக்கு வந்தார். அப்பொழுது அவரது கையிலே கமண்டலமும் தண்டும் இருந்தன. கமண்டலத்திலே கங்கா நதியின் தீர்த்தம் இருந்தது. வரும் வழியிலே அகத்தியர் கொங்கு நாட்டிலே தங்கினார்.



அகத்திய முனிவர்

தேவர்களுக்கு அரசனாகிய இந்திரன் கொங்கு நாட்டிலே தவஞ் செய்து கொண்டிருந்தான். அப்பொழுது அங்கே மழையில்லாமல் பூஞ்செடிகள் வாடின. அதனால், சிவ பூசைக்குத் தேவையான மலர்கள் இந்திரனுக்குக் கிடைக்க வில்லை. ஆகவே இந்திரன் மனம் வருந்தினான். தன் குறையை நீக்கும்படி பிள்ளையாரை வணங்கினான்.

பிள்ளையார் இந்திரனுக்கு முன் தோன்றினார். அவருடைய குறையை நீக்குவதாகக் கூறினார். பின்னர் அகத்திய முனிவர் இருந்த இடத்தை அடைந்தார்.

அகத்திய முனிவரது கமண்டலத்தின் மேல் ஒரு காகம் பறந்து வந்து இருந்தது. முனிவர் காகத்தைக் கலைத்தார். அது போகவில்லை. உடனே எழுந்து அதற்குக் கிட்டப் போனார். காகம் கமண்டலத்தைக் கவிழ்த்து விட்டு எழுந்தது. பின்னர் காகத்தைக் காணவில்லை. அங்கே சிறுவன் ஒருவன் சிரித்துக் கொண்டு நின்றான்.

சிறுவன் மீது அகத்தியருக்குக் கோபம் உண்டாயிற்று. அவனைக் குட்ட வேண்டும் போல அகத்தியருக்குத் தோன்றிற்று. சிறுவனைக் குட்டப் போனார். சிறுவன் ஓடினான்; அகத்தியரும் அவனைக் கலைத்துக் கொண்டு ஓடினார்.

சிறுவனைப் பிடிக்க முடியவில்லை. அகத்தியர் களைத்துப் போனார். ஓரிடத்திலே இருந்து இளைப்பாறினார்.

அப்பொழுது பிள்ளையார் அகத்தியர் முன்னே தோன்றினார். காகமாகவும் சிறுவனாகவும் தோன்றியவர் பிள்ளையாரே என்பதை உணர்ந்தார். அகத்தியர்; 'ஐயோ, என் பிழையைப் பொறுத்தருள வேண்டும்' என்று கூறித் தன் தலையிலே குட்டி வணங்கினார். பிள்ளையார் அருள்செய்து மறைந்தருளினார்.

அகத்தியருடைய கமண்டலம் கவிழ அதிலிருந்து ஓடிய வெள்ளம் ஆறாகப் பாய்ந்தது. இந்திரனுடைய பூந்தோட்டம் குளிர்ந்தது. அவனுடைய துன்பமும் நீங்கிற்று. அந்த ஆற்றுக்குக் **காவிரி** என்பது பெயர்.

## பயிற்சி

1. அகத்தியரின் உருவம் எப்படிப்பட்டது?
2. அகத்தியர் தென்னாட்டுக்கு வரும்போது கொண்டு வந்தன யாவை?
3. காகமாக மாறியவர் யார்? ஏன் அங்ஙனம் மாறினார்?
4. பிள்ளையாரை வணங்கும் போது அகத்தியர் எப்படி வணங்கினார்?
5. இந்திரனுக்கு இருந்த குறைகள் என்ன? அது எப்படி நீங்கியது?

### பதினேழாம் பாடம்

# கொன்றை வேந்தன் - 2

கற்பெனப் படுவது சொல்திறம் பாமை
காவல்தானே பாவையர்க் கழகு
கிட்டா தாயின் வெட்டென மற
கீழோ ராயினுந் தாழ உரை
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை
கூரம் பாயினும் வீரியம் பேசேல்
கெடுவது செய்யின் விடுவது கருமம்
கேட்டி லுறுதி கூட்டு முடைமை
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி
கொற்றவ னறிதல் உற்றிடத் துதவி
கோட்செவிக் குறளை காற்றுடன் நெருப்பு
கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.
சந்ததிக் கழகு வந்திசெய் யாமை
சான்றோ ரென்கை ஈன்றோட் கழகு
சிவத்தைப் பேணில் தவத்திற் கழகு
சீரைத் தேடின் ஏரைத் தேடு
சுற்றத்திற் கழகு சூழவிருத்தல்
சூதும் வாதும் வேதனை செய்யும்
செய்தவ மறந்தாற் கைதவ மாளும்
சேமம் புகினும் யாமத் துறங்கு
சையொத் திருந்தா லைய மிட்டுண்
சொக்க ரென்பவ ரத்தம் பெறுவர்
சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்
தந்தை சொல் மிக்க மந்திரமில்லை
தாயிற் சிறந்ததொரு கோயிலு மில்லை

திரைகட லோடியும் திரவியந் தேடு
தீராக் கோபம் போராய் முடியும்
துடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு
தூற்றும் பெண்டிர் கூற்றெனத் தகும்
தெய்வஞ் சீறிற் கைதவ மாளும்
தேடா தழிக்கிற் பாடா முடியும்
தையும் மாசியும் வையகத் துறங்கு
தொழுதூண் சுவையின் உழுதூண் இனிது
தோழனோடும் ஏழைமை பேசேல்
நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்
நாடெங்கும் வாழக் கேடொன்று மில்லை
நிற்கக் கற்றல் சொற்றிறம் பாமை
நீரகம் பொருந்திய வூரகத் திரு
நுண்ணிய கருமமும் எண்ணித் துணி
நூன்முறை தெரிந்து சீலத் தொழுகு
நெஞ்சை யொளித்தொரு வஞ்சக மில்லை
நேரா நோன்பு சீரா காது
நைபவ ரெனினும் நொய்ய வுரையேல்
நொய்யவ ரென்பவர் வெய்யவ ராவார்
நோன்பென்பதுவே கொன்று தின்னாமை
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்
பாலோ டாயினும் காலமறிந்துண்
பிறன்மனை புகாமை அறமெனத் தகும்
பீரம் பேணி பாரந் தாங்கும்
புலையும் கொலையும் களவுந் தவிர்
பூரியோர்க் கில்லை சீரிய வொழுக்கம்
பெற்றோர்க் கில்லை சுற்றமுஞ் சினமும்
பேதைமை யென்பது மாதர்க் கணிகலம்
பையச் சென்றால் வையந் தாங்கும்
பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்

போனகமென்பது தானுழந் துண்டல்
மருந்தே யாயினும் விருந்தோ டுண்
மாரி அல்லது காரிய மில்லை
மின்னுக்கெல்லாம் பின்னுக்கு மழை
மீகாமனில்லா மரக்கலம் ஓடாது
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
மூத்தோர் சொன்ன வார்த்தை அமிர்தம்
மெத்தையிற் படுத்தல் நித்திரைக் கழகு
மேழிச் செல்வம் கோழை படாது
மைவிழி யார்தம் மனையகன் றொழுகு
மொழிவது மறுக்கின் அழிவது கருமம்
மோனம் என்பது ஞான வரம்பு
வளவ னாயினும் அளவறிந் தழித்துண்
வானஞ் சுருங்கில் தானம் சுருங்கும்
விருந்திலோர்க் கில்லை பொருந்திய வொழுக்கம்
வீரன் கேண்மை கூரம் பாகும்
உரவோ ரென்கை இரவா திருத்தல்
ஊக்க முடைமை ஆக்கத்திற் கழகு
வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை
வேந்தன் சீறின் ஆந்துணை யில்லை
வையந் தோறும் தெய்வம் தொழு
ஒத்த விடத்து நித்திரை கொள்
ஓதாதார்க் கில்லை உணர்வொடு ஒழுக்கம்

உ

சிவமயம்



# சைவ போதினி

## மூன்றாம் வகுப்பு

**அரசினர் பாடத்திட்டத்திற்கு**
**அமைய எழுதப்பெற்றது**

## 1972

உரிமை பெற்றது.

# பதிப்புரை

(கொழும்பு, விவேகானந்த சபை இந்நூலை
வெளியிட்ட போது இடம்பெற்ற பதிப்புரை)

எமது சபை நடாத்தும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சைக்குரிய புதிய பாடத்திட்டத்துக்குச் சிறந்த முறையில் உதவக்கூடிய வழியில், **'சைவபோதினி'** தொகுக்கப்பட்டுள்ளது. சைவ மாணவ, மாணவிகள் தத்தம் தகுதிகட்கு ஏற்றவாறு, இலகுவில் படித்துக் கிரகிக்கக் கூடிய முறையில், இப்புதிய வெளியீடு பிரசுரிக்கப்பட்டுள்ளது. இந்நூல் **மூன்றாம் வகுப்புச்** சிறுவர்களுக்குப் பயன்படக்கூடிய சிறந்த பதிப்பாக அச்சிடப்பட்டிருக்கின்றது. சைவசமயத்தின் தத்துவார்த்த விளக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடங்கள், நாயன்மார் சரித்திரங்கள், புராணக்கதைகள், சைவத் திருமுறைகள் இப்பதிப்பில் இலகுவாகப் போதிக்கப்படக்கூடிய முறையில் அரசினர் பாடத்திட்டத்தைத் தழுவியே எழுதப்பட்டுள்ளன.

கடந்த நாற்பத்துமூன்று வருடங்களாக இச்சபையாரால் ஆண்டு தோறும் நடாத்தப்பட்டுவரும் அகில இலங்கைச் சைவசமய பாடப் பரீட்சையும், இப்பரீட்சையின் அடிப்படைக் காரணமாகிய சைவசமயப் போதனையும் மேன்மேலும் விருத்தியடைந்து வருவதற்கு **'சைவபோதினி'** ஒரு பற்றுக்கோடாக இருக்குமென்பதில் ஐயமில்லை.

**"குற்றங்களைந்து குணமளைந்து கொள்ளுதல், கற்றறிந்த மாந்தர் கடன்"** என்பதற்கமைய இப்பதிப்பிற் குறைகள், பிழைகள் இருப்பின் அவற்றை எமக்கு அறிவிக்குமாறு அன்பர்களை அன்புடன் வேண்டுகிறோம்.

**இந்நூற்றொகுதியில் உள்ள பாடங்களை ஒழுங்காகக் கற்கும் மாணவருலகம் நன்மை பெறும் என்பதில் யாதுமோர் ஐயுறவில்லை.**

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

34, விவேகானந்த மேடு,
கொழும்பு 13.
17-01-79.

**கொழும்பு
விவேகாநந்த சபையார்.**



திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்

உ
சிவமயம்

# சைவ போதினி

## சைவ சமயத் தொகுப்பு நூல்

மூன்றாம் வகுப்பு



திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்

## 1ஆம் பாடம்
## திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்
### தேவாரம்

திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாமரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

**இதன் பொருள்:** பிராமணர், தேவர்கள் யாவரும் நன்றாக வாழுக. பசு இனங்களும் வாழுக. குளிர்ந்த மழை பொழிக. அரசனும் சிறந்து வாழுக. கெட்டன அழிக. சிவபிரான் திருநாமம் எங்கும் எப்போதும் முழங்குக. உலகத் துன்பங்கள் நீங்குக.

**குறிப்பு:** அந்தணர் - பிராமணர்; ஆனினம் - பசுக்கூட்டம்; அரன் - சிவபெருமான்.

## திருப்பிரமபுரம்

**தோடுடைய செவியன் விடையேறிஓர்**
**தூவெண் மதிசூடி**
**காடுடைய சுடலைப்பொடி பூசிஎன்**
**உள்ளங்கவர் கள்வன்**
**ஏடுடைய மலரான்முனை நாட்பணிந்**
**தேத்தஅருள் செய்த**
**பீடுடைய பிரமாபுர மேவிய**
**பெம்மான் இவனன்றே.**

**பொருள்:** தோடணிந்த காதை உடையவன்; இடப வாகனத்தின் மேல் ஏறி வருபவன்; சடையிலே பிறையை அணிந்தவன்; திருமேனியிலே சுடலைச் சாம்பலைப் பூசியவன்; இப்படி வந்து என் மனதைத் தன்னிடம் இழுத்தவன். முற்பிறப்பிலே இதழ்களை உடைய பூக்களை இட்டு நான் வழிபட்டமையால் இப்போது எனக்கு அருள் செய்தவன், பெருமை பொருந்திய அப் பெருமான் சீர்காழிக் கோயிலிலே இருக்கின்ற இந்தச் சிவபெருமானே.

**குறிப்பு:** விடை - இடப வாகனம்; தூ-சுத்தமான; காடுடைய சுடலைப்பொடி-சுடலைக் காட்டிலுள்ள சாம்பல்; ஏடு-பூவின் இதழ்; பீடு-பெருமை; பெம்மான்-பெருமான் அல்லது கடவுள்; இவன்-(தந்தையாருக்குப் பிள்ளையார் சுட்டிக் காட்டிய)சிவன்.

## திருநெய்த்தானம்

**மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்**
**கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்**
**செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடும்**
**நெய்யாடிய பெருமானிடம் நெய்த்தான மெனீரே.**

**பொருள்:** நஞ்சினாலே கறுத்த கண்டத்தை உடையவர்; உமாதேவியாரை இடப்பாகத்திலே வைத்திருப்பவர்; எவரும் அழிக்கமுடியாத துதிக்கையை உடைய யானைத் தோலைப் போர்த்திருப்பவர்; வயலிலுள்ள நீலோற்பலப் பூவைப் போன்ற திருக்கண்ணையுடைய உமாதேவியாருடன் நெய் முதலியவற்றால் அபிஷேகம் செய்யப் பெறுபவர் - அப்படிப்பட்ட சிவபெருமான் எழுந்தருளிய திருக்கோயில் திருநெய்த்தானம் என்று கூறுங்கள்.

**குறிப்பு:** மை-கருமை; மலைமகள்-உமாதேவி; கையாடிய-கை அசைந்து கொண்டிருக்கின்ற; கரி-யானை; உரி-தோல்; செய் ஆடிய-வயலிலே அசையும்; நயனம்-கண்; நெய் ஆடிய-நெய்யினால் அபிஷேகம் பெற்ற.

## 2 ஆம் பாடம்

# கோயில்களுக்குச் செல்லுதல்

கடவுள் ஆன்மாக்களுக்கு அருள் புரியச் சிறப்பாக எழுந்தருளியிருக்கும் இடம் கோயிலாகும். பாலுள்ள பசுவின் மடியிலிருந்து நாம் இன்சுவைப் பாலைப் பெறுகிறோம். அது போலவே கோயிலிலுள்ள இறைவன் திருவுருவத்தை வழிபட்டு நாம் அருள் பெறுகிறோம். சைவ சமயத்தவர் நாள் தோறும் கோயிலுக்குச் செல்ல முடியாவிடில் வெள்ளிக்கிழமைகளிலே தவறாது சென்று வழிபடல் வேண்டும். விசேட தினங்களில் கோயிலுக்குச் சென்று கடவுளை வழிபடுதல் நமது கடன்.

ஒரு பெரியாரை நாம் காணச் செல்லும்போது சுத்த உடலுடன் சுத்தமான உடை அணிந்து அவர் மனம் மகிழச் செல்கிறோம். அப்படியாயின், எல்லோரிலும் பெரிய கடவுளை வணங்கக் கோயிலுக்கு நாம் செல்லும்போது எவ்வளவோ சுத்தமாக அன்புடனும் அமைதியுடனும் செல்லுதல் அவசியம். குளித்து, தோய்த்துலர்ந்த ஆடை தரித்து, விபூதி அணிந்து, கடவுளைப் பற்றியே சிந்தித்துக் கொண்டு, பூ முதலியவற்றுடன் கோயிலுக்குச் செல்லுதல் வேண்டும். கோயில் நீர் நிலைகளிலே கால் கழுவிக் கோபுரத்தை வணங்கி உள்ளே போதல் வேண்டும்.

நம் ஊர்களிலே பிள்ளையார், சிவபெருமான், அம்பாள், முருகப் பெருமான் கோயில்கள் உண்டு. பிள்ளையாரை வணங்கும் போது இரு கைகளாலும் நெற்றியிலே குட்டிக் கும்பிட வேண்டும். இரு கைகளையும் மாறிக் காதிலே பிடித்துக் கொண்டு மூன்று முறை இருந்து எழுந்து (தோப்புக் கரணம் இட்டு) வணங்குதல் முறை. ஆண்கள் தலை, கையிரண்டு, செவி இரண்டு, மோவாய், தோள்கள் இரண்டு ஆகிய எட்டு உறுப்புக்களும் நிலத்திலே படிய விழுந்து வணங்குதல் வேண்டும். பெண்கள் தலை, கையிரண்டு, முழந்தாள் இரண்டு என்னும் ஐந்து உறுப்புக்களும் நிலத்திலே படிய விழுந்து வணங்குதல் வேண்டும்.

பெரியோர்கள் வணங்கும் முறையைப் பார்த்து நாமும் வணங்குதல் நன்று. தோத்திரம் சொல்லியபடியே கோயிலை மூன்று தரமாயினும் ஐந்து தரமாயினும் வலம் வந்து கும்பிட்டு, பின் சண்டேசுரரையும் வணங்குதல் முறை. அதன் மேல் எம்பெருமான் சந்நிதானத்திலே சிறிது நேரம் இருந்து அவரை மனத்தாலும் துதித்து வீடு செல்லுதல் வேண்டும்.

**"கால்க ளாற்பயனென் -**
**கறைக் கண்டனுறை கோயில்**
**கோலக் கோபுரக் கோகர ணஞ்சூழாக்**
**கால்களாற் பயனென்."**

### வினாக்கள்

1. கோயிலுக்கு யாம் எப்படிச் செல்லுதல் வேண்டும்?
2. நாம் பிள்ளையாரை எப்படி வணங்குகிறோம்?
3. சண்டேசுரரை எப்போது வணங்குதல் வேண்டும்?
4. உமது கிராமத்திலுள்ள கோயில்கள் எவை?

## 3 ஆம் பாடம்

# சரியை வழிபாடு

சிவபெருமான் ஆண்டவர். நாம் அவருக்கு அடிமைகள். அவர் எங்களுக்குத் தந்தையும் தாயுமாக இருந்து வேண்டிய நன்மைகள் செய்கிறார். அடிமை தன் எசமானிடம் விசுவாசமாக நடக்க வேண்டும். நாமும் அங்ஙனமே எங்கள் தலைவராகிய இறைவனுக்கு எங்களால் இயன்ற தொண்டுகளை மிக்க அன்புடன் செய்தல் வேண்டும். இப்படித் தொண்டு செய்தலும் வழிபாடே. இதனையே **சரியை** வழிபாடு என்பர்.

கோயிலிலே உடம்பாலே தொண்டு செய்வதற்குப் பல வழிகளுண்டு. கோயில் மண்டபங்களையும் வீதிகளையும் கூட்டுதலை அலகிடுதல் என்பர். மெழுகக்கூடிய கோயிற் பகுதிகளை மெழுகினால் அல்லது நீர் தெளித்தால் பரிசுத்தமாயிருக்கும். புற வீதியிலுள்ள கற்களையும் முட்களையும் அகற்றுதல் நல்ல தொண்டாகும். சுத்தமான இடத்திலே நின்று கும்பிட்டால் எமது மனம் சுத்தமும் அமைதியுமடையும். சுத்தம் சிவத்திற்கு அடுத்தபடி என்பர்.

எம் பெருமான் கோயிலின் அயலிலே பூசைக்கு வேண்டிய பூ மரங்களை உண்டாக்கலாம். பசளையிட்டுப் பாத்தி அமைக்கலாம். நீரிறைக்கலாம். பூக்களைக் கொய்து சுத்தமான இடத்திலே இருந்து மாலை கட்டிக் கொள்ளலாம்.

திருவிழாக் காலங்களிலே சுவாமி வீதிவலம் வரும்போது தீவர்த்தி பிடிக்கலாம். சுவாமியின் திரு உருவத்தைத் தோளிலே தாங்கி வருதலும் நல்லதே. இவை எல்லாம் சரியைத் தொண்டுகளாகும்.

இப்படி எங்களால் இயன்ற தொண்டை அன்புடன் நாம் செய்துவரின் இறைவன் எமக்கு அருள் புரிவார். கணநாத நாயனார் இப்படி அடியார்களைச் சரியைத் தொண்டில் ஈடுபடுத்தினார்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே"

## வினாக்கள்

1. தொண்டு செய்தலாகிய வழிபாட்டை எப்படிக் கூறுவர்?
2. கோயில் ஏன் சுத்தமாயிருத்தல் வேண்டும்?
3. நாம் செய்யக்கூடிய சில கோயில் தொண்டுகள் கூறுக?
4. நிரப்பி முழு வசனமாக்குக -
   (i) கோயில் வீதிகளில் ஒன்று உள்வீதி ..........................................
   (ii) பூக்களைக்.......................... சுத்தமான.......................... இருந்து மாலை..........................

## 4 ஆம் பாடம்

# கோயிலைச் சுத்தம் செய்தல்

நாள் தோறும் நாம் பல் விளக்கி, முகம் கழுவி, குளித்து எம்மைச் சுத்தமாக வைத்திருக்கிறோம். எமது வீடுகளைப் பெருக்கி, குப்பை அகற்றி, நீர் தெளித்துக் கோலமிட்டு அழகாக்குகிறோம். வீடு அழகாக இருக்கும் போது மனமும் இன்புறுகிறது. அப்படியாயின் பலரும் வந்து வழிபடும் கோயிலை நாம் மிகச் சுத்தமாக வைத்திருக்க வேண்டுமல்லவா! அடிக்கடி வழிபாட்டிற்காக மக்கள் வந்து செல்வதால் நாள் தோறும் இடையிடையே கோயிலைச் சுத்தம் செய்தலும் அவசியம். நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே இப்படி நடைபெறுகிறது.

பழைய பூமாலைகள், இளநீர்க் கோம்பைகள், தேங்காய் முடிகள், வாழை நார்கள் கோயிலின் பக்கங்களிற் குவியும். அவற்றை அடிக்கடி அகற்றாவிட்டால் கோயிலின் அயல் அழுக்காகிவிடும். சுவாமிக்கு அபிஷேகம் செய்வதால் அபிஷேக நீர் கோமுகை வழியாகப் பாய்ந்து நிலத்திலே சிந்தும். கோயிற் பாத்திரங்களைத் துப்புரவு செய்யும் போதும் சாம்பல், கரி, தேங்காய் மட்டைகள், நீர் முதலியவற்றால் நிலம் அழுக்கடையும். ஆகவே அடிக்கடி சுத்தம் செய்தல் அவசியம்.

வீதியிலுள்ள பூமரங்களிலிருந்து இலைகள், பூக்கள் உதிர்கின்றன. அவற்றை அள்ளி மரங்களுக்குப் பசளை ஆக்கலாம். கோயில் வீதியில் புல், பூண்டுகள், முள், மரங்களை வெட்டுதலும், கற்களை அகற்றுதலும் கோயிலின் பக்கங்களைச் சுத்தமாக வைத்திருப்பதற்கு வழியாகும்.

அதிகாலையில் புலர்வதன் முன் அலகிட்டு, மெழுகிட்டு, நீர் தெளித்தல் அவசியம். கோயிலும் அதன் புறமும் சுத்தமாக இருக்கும் நிலையிலேயே எம்பெருமானுக்குத் தூபதீபமிட்டுப் பூசை நடைபெறல் வேண்டும். அப்பொழுது அடியாருள்ளமும் பரிசுத்தமாகும். இப்படித் தாம் செல்லுமிடமெல்லாம் ஆலயத் திருத்தொண்டாகிய சரியைத் தொண்டு செய்தவர் அப்பர் சுவாமிகள்; அவரே நமக்கு வழிகாட்டி.

"விளக்கினார் பெற்ற இன்பம்
மெழுக்கினாற் பதிற்றியாகும்."

## வினாக்கள்

1. ஏன் நாள்தோறும் கோயிலை இடையிடையே சுத்தம் செய்தல் வேண்டும்?
2. எப்போது கோயிலில் நீர் தெளித்தல் அவசியம்?
3. சரியைத் தொண்டு செய்த நாயனார் ஒருவர் பெயர் தருக?
4. விட்ட இடம் நிரப்புக.
   (i) புற வீதியிலே.............................வெட்டி.............................அகற்றிச் சுத்தம் செய்யலாம்
   (ii) உதிர்ந்த.............................களையும் இலைகளையும்.............................ஆக்கலாம்

## 5 ஆம் பாடம்

# அப்பர் சுவாமிகள் தேவாரம்



அப்பர் சுவாமிகள்

அப்பர் சுவாமிகளைச் சமண அரசன் கல்லோடு கட்டிக் கடலில் இட்டபோது சிவநாமம் பாடி அவர் மிதந்து கரையேறியது.

**சொற்றுணை வேதியன் சோதி வானவன்**
**பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழ**
**கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்**
**நற்றுணை ஆவது நமச்சி வாயவே.**

**பொருள்:** நாம் தன் திருப்பெயரைக்கூற உதவி செய்யும் கடவுள் சிவம். அவர் ஒளி வடிவான தேவன். அவருடைய அழகிய பாதங்கள் இரண்டையும் கை கூப்பி வணங்குவோம். அப்படிச் செய்தால் பகைவர் கல்லைக் கட்டி எம்மைக் கடலிலே இட்ட நேரத்திலும் அவருடைய திருநாமமாகிய 'நமசிவாய' என்பது நாம் கடலிலே அமிழ்ந்தாது துணை செய்யும்.

(சிவபெருமானுடைய திருமந்திரம் 'நமசிவாய' என்பது. அது எங்களுக்கு எப்பொழுதும் நல்ல துணையாகும் என்பதே கருத்து)

**குறிப்பு:** சொல் - நமசிவாய என்பது; வேதியன் - சிவபெருமான்; வானவன் கடவுள்.
பொற்றுணை - பொன் போலும்; திருந்தடி - அழகிய திருப்பாதம்; கற்றுணைப்பூட்டி கல்லை இறுகக் கட்டி; நல்துணை - எங்களுக்கு நல்ல துணை.

## (1)

# திருவதிகை வீரட்டானம்

அப்பர் சுவாமிகள் சூலை நோயால் வருந்தினார். சிவபெருமானை நோக்கி அக்கொடிய நோயை நீக்குமாறு வேண்டி இதனைப் பாடினார். அவர் இதனைப் பாடிய தலமே திரு அதிகை வீரட்டானம்.



அப்பர் சுவாமிகள்

**கூற்றா யினவா றுவிலக் ககிலீர்**
**கொடுமை பலசெய் தனநா னறியேன்**
**ஏற்றா யடிக்கே இரவும் பகலும்**
**பிரியாது வணங் குவன் எப்பொழுதும்**
**தோற்றா தென்வயிற் றின்அகம் படியே**
**குடரோ டுதுடக் கிமுடக் கியிட**
**ஆற்றேனடியே னதிகைக் கெடில**
**வீரட் டானத் துறை அம்மானே.**

**பொருள்:** இச் சூலை நோய் எனக்கு யமன் போலிருக்கிறது. சுவாமி அதை நீக்கிவிடல் வேண்டும். நான் வேண்டுமென்று எண்ணி எக்கொடுமையும் செய்யவில்லை. என்னை ஏற்றுக் கொண்ட கடவுளே! இரவும் பகலும் விட்டுப் பிரியாது தேவரீரையே வணங்குவேன். இந்த நோய் கண்ணுக்குத் தெரியாமல் என் வயிற்றினுள்ளே குடலைத் திருகுகின்றது. கெடில நதி பாய்கின்ற திரு அதிகை என்னும் இடத்திலுள்ள திரு வீரட்டானத் தெய்வமே! என்னால் இந்த நோயைத் தாங்க முடியவில்லையே. (இரங்கி, நோயைத் தீர்த்து அருளுக.)

**குறிப்பு:** கூற்று-இயமன். ஏற்றாய்-என்னை அன்பாகச் சேர்த்துக்கொண்டவனே. அடிக்கு-உன் பாதங்களுக்கு; துடக்கி முடக்கல்-சூலை நோய் முறுக்கி வருத்துதல். கெடிலம்-ஓர் ஆற்றின் பெயர். திரு அதிகை என்னும் இடத்தில் வீரட்டானம் ஒரு கோயில். உறை-வீற்றிருக்கின்ற. அம்மான் - கடவுள்.

## (2)

# திருப்பாதிரிப்புலியூர்

புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா
உன்னடி என்மனத்தே
வழுவாதிருக்க வரந்தர
வேண்டும்இவ் வையகத்தே
தொழுவார்க் கிரங்கி இருந்தருள்
செய்பா திரிப்புலியூர்ச்
செழுநீர்ப் புனற்கங்கை செஞ்சடை
மேல்வைத்த தீவண்ணனே.

**பொருள்:** புண்ணியமூர்த்தியாகிய கடவுளே! நான் அற்பமான புழுப் பிறவி எடுத்தாலும் உன்பாதங்கள் இரண்டும் என் மனத்திலே உறுதியாக இருக்க எனக்கு அருள் செய்க. திருப்பாதிரிப் புலியூர் என்ற இடத்திலே நீர் வற்றாத கங்கை ஆற்றைச் சடை மேல் வைத்த சோதி வடிவானவனே! உன்னை வணங்கும் என்மீது இரக்கங்கொண்டு திருவருள் செய்.

**குறிப்பு:** புழு - மிக அற்பமான எலும்பில்லாத பிராணி. வழுவாதிருக்க - உறுதியாக இருக்கும்படி, வையகம் - பூமி, புனற் கங்கை- எப்பொழுதும் நீர் நிறைந்த ஆறு, தீ - நெருப்பு, வண்ணன் - அழகுடையவன்.

## 6 ஆம் பாடம்

# சிவபிரான் கல்லானைக்குக் கரும்பு தீற்றியது

அபிடேக பாண்டியன் மதுரையை அரசாண்ட காலத்திலே ஒரு சித்தர் மதுரைக்கு வந்து பல அற்புதங்களைச் செய்தார். யாவரும் காணத் திடீரென மறைவார். தூரத்தில் உள்ள பொருட்களைக் கிட்ட வரும்படி செய்வார். கிட்ட உள்ள பொருட்களை அதிதூரத்திலே தோற்றுமாறு செய்வார். வைகையாற்று நீரைத் திடீரென பெருகச் செய்வார். மீள வற்றும்படி செய்வார். கடல் நீரை நல்ல நீராக்குவார். இப்படிப் பல அற்புதச் செயல்களை அவர் செய்வதை அறிந்த மன்னன் அவரைத் தன்னிடம் வரும்படி அழைத்தான்.

அரசனால் தனக்கு ஆகக் கூடியது ஒன்றுமில்லை என்று அவர் வர மறுத்துவிட்டார். பாண்டிய மன்னன் தானே அப்பெரியாரிடம் சென்றான். அவர் புலித் தோலின் மீது இறுமாப்புடனிருந்தார். பாண்டியன் அவர் நாட்டையும் ஊரையும் பெயரையும் விசாரித்தான். அவர் எல்லா நாட்டிலும் எல்லா ஊரிலும் வாழும் எல்லாம் செய்ய வல்ல சித்தர் என்று தம்மைப் பற்றிக் கூறினார்.

அப்பொழுது ஒருவன் பாண்டிய மன்னனுக்குக் கரும்பொன்றைக் கொண்டுவந்து கொடுத்தான். மன்னன் "நீர் எல்லாம் வல்ல சித்தராயின் இதோ இந்தக் கரும்பைப் பக்கத்திலுள்ள கல்லானை உண்ணும்படி செய்வீராயின் சோமசுந்தரக் கடவுள் நீரே. நீர் விரும்பியது தருவேன்" என்றான். சித்தர் புன்முறுவல் தவழ "உன்னிடம் யாம் பெற வேண்டியது ஒன்றும் இல்லை. உன்னாசை தீர நாமே உனக்கு வேண்டியது தருவோம். இதோ கல்லானை கரும்பு கறிப்பதைப் பார்" என்று கூறி அந்த யானை மீது கடைக்கண் சாத்தினார்.

அவ்வளவில் அக்கல்லானை வாய் திறந்து ஆரவாரித்துப் பாண்டியன் கையிலுள்ள கரும்பைப் பறித்துக் கறித்தது. சாறு கடைவாயால் வழியப் பருகிச் செருக்குடன் நின்றது. சித்தர் யானை மீது கரத்தை வைத்து அருளுடன் அதனைப் பார்த்தருளினார். அது கல்லாக மாறிற்று. பின் சித்தர் திடீரென மறைந்தருளினார்.

பாண்டியன், மதுரைச் சோமசுந்தரப் பெருமானே செய்த திருவிளையாடல் அஃது என அறிந்தான். தன் பிழையைப் பொறுத்தருளுமாறு பன்முறை வேண்டித் துதித்தான். பெருமான் அவனுக்குத் திருவருள் புரிந்தார்.

"சித்தாசித்தித் திறங்காட்டுஞ்
சிவனே தேவர் சிங்கமே"

### வினாக்கள்

1. சித்தர் செய்த அற்புதங்கள் எவை?
2. பாண்டியன் சித்தரை நாடு, ஊர், பெயர் விசாரித்தபோது அவர் என்ன விடை தந்தார்?
3. சித்தர் மறைந்ததும் பாண்டியன் யாது கூறித் துதித்தான்?

## 7 ஆம் பாடம்

# சிவபெருமான் பாலனாய்த் தொட்டிலிற் கிடந்தமை

மதுரையிலே விருபாக்கன் என்னும் பிராமணன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி கற்பிற் சிறந்தவள். அவள் பெயர் சுபவிரதை. குழந்தை இல்லாமையால் இருவரும் பல தான தருமங்கள் செய்து வாழ்ந்தனர். அவர்கள் தவப் பயனால் ஒரு பெண் குழந்தை பிறந்தது. அப்பிள்ளைக்குக் கௌரி என்று பெயரிட்டனர்.

இத் தவக் குழந்தை இளமையிலேயே தேவி மந்திரத்தை முறைப்படி பயின்றது. தகப்பன் தவத்தாலுயர்ந்த ஒரு சிவப்பிராமணனுக்கு மகளை விவாகம் செய்து கொடுக்க விரும்பினான். ஆனால் அவள் ஒரு வைஷ்ணவப் பிராமணனையே விவாகம் செய்ய நேர்ந்தது. நாயகன் பெண்ணைத் தன் வீட்டிற்குக் கொண்டு சென்றான். அங்கு அவனுடனும், அவனுடைய தாய், தந்தையருடனும் கௌரி வசித்து வந்தாள். தாய், தந்தையருக்குக் கௌரி மேல் பிரியமில்லாததால் அவளை ஒதுக்கி வைத்து நடத்தினர்.

ஒரு நாள் தமது சுற்றத்தார் கலியாணமொன்றிற்கு இவர்கள் எல்லோரும் புறப்பட்டனர். கௌரியைத் தனியே விட்டு வீட்டையும் பூட்டிக் கொண்டு போனார்கள்.

கௌரி சிவ நினைவாகவே இருந்தாள். தான் ஒரு சிவனடியாரையேனும் வரவேற்று அவருக்குத் தொண்டு செய்யும் பாக்கியம் கிட்டவில்லையே என்று வருந்தினாள். சிவபெருமானே ஒரு கிழச் சிவனடியார் போல கௌரியிடம் வந்தார். கௌரி மனம் மகிழ்ந்து அவரை அன்புடன் வணங்கி வரவேற்றாள். பசியோடு தன்னிடம் வந்த சிவனடியாருக்கு அமுது படைக்க முடியவில்லையே என்று துடிதுடித்தாள். "குழந்தாய்! உன் கையினாலே பூட்டைத் தொடு. தானாகவே திறக்கும்" என்று சிவனடியார் கூறினார். அப்படியே கௌரி தொடப் பூட்டுத் திறந்தது. கௌரி அன்புடன் சமைத்து அடியவருக்கு ஆதரவுடன் அன்னமிட்டாள். திருவமுது செய்ததும் அந்தக் கிழவனார் பதினாறு வயது இளங் காளை வடிவங் கொண்டார். கௌரி அஞ்சி, செய்வதறியாது, கூசி ஒதுங்கி நின்றாள்.

இந்த நிலையிலே கல்யாணத்திற்குச் சென்ற வீட்டுக்காரர் திரும்பி விட்டனர். இளைஞன் இப்போது அழகிய பச்சிளங் குழந்தையாகிக் காலை வளைத்துப் பெருவிரலைச் சுவைத்தபடி கிடந்தான். மாமியார் அக்குழந்தை யார் எனக் கேட்டாள். அது அயல் வீட்டார் தன்னிடம் சிறிது நேரம் பார்க்குமாறு விட்டுச் சென்ற குழந்தை என்றாள் கௌரி. எல்லோரும் குழந்தையுடன் கௌரியை வெளியே துரத்தினர். உறவினரற்ற ஏழைப் பெண் மதுரைப் பெருமானை மனத்திலே நினைந்து தேவி மந்திரத்தை உச்சரித்தாள். அப்பொழுது சிவபெருமான் தோன்றி எப்பொழுதும் தேவி மந்திரத்தை உச்சரிக்கும் அக்கௌரியை உமாதேவி வடிவாக்கி இடபத்தில் ஏற்றி அருளினார். எல்லோரும் இந்த அதிசயத்தை நோக்கிக் களிப்புற்றனர்.

‘வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய் ”

## வினாக்கள்

1. கௌரி இளமையிலே பயின்ற மந்திரம் யாருக்குரியது?

2. கௌரியை மாமன் மாமியர் வெறுத்ததேன்?

3. தனித்திருந்த கௌரியின் மனத்தில் என்ன எண்ணம் எழுந்தது?

4. எதிர்ப்பதம் தருக: உறவினர், கிழவனார், வெறுப்பு, திறத்தல்

# 8 ஆம் பாடம்

## சுந்தரமூர்த்தி நாயனார்



சுந்தரமூர்த்தி சுவாமிகள்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தமிழ் நாடு உய்யக் கைலாயத்திலிருந்து சிவபிரான் திருவருளால் திருநாவலூரில் அவதரித்தார். அவருடைய அழகைக் கண்டு இப்பிராமணப் பிள்ளையை அந்நாட்டு அரசன் கூட்டிச் சென்றான். தன்பிள்ளை போல் வளர்த்தான். இவருடைய கலியாணக் காலத்தில் சிவபெருமான் வயது முதிர்ந்த பிராமணர் போல வந்து இவர் தமது அடிமை என்று வாதாடினார். சுந்தரர் எதிர்த்து வாதாடினமையால் **வன்தொண்டர்** என்னும் பெயர் பெற்றார். சிவபெருமான் கேட்டுக் கொண்டபடியே "பித்தா பிறை சூடி" என்ற தேவாரத்தைப் பாடியருளினார்.

திருவாரூரிலே **பரவையார்** என்னும் பெருமை பெற்ற பெண்ணை விரும்பி மணந்தார். திருவாரூரிலே தியாகராசப் பெருமானை வழிபட்டு "தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்" என்று பாடி அடியவர்களைத் துதித்தார். திருப்புகலூரிலும் திருமுதுகுன்றத்திலும் இறைவன் பொன் கொடுக்கப் பெற்றார்.

பல தலங்களையும் வழிபட்டு வரும் போது திருஒற்றியூரிலே சிவனடியாராகிய **சங்கிலியார்** என்னும் பெண்மணியை மணந்தார். தமது கண்கள் இரண்டும் மறைந்த போது எம்பெருமானை வேண்டிப் பாடி கண்களைப் பெற்று மகிழ்ந்து மேலும் தேவாரம் அருளினார். இவருக்கு அரிய பெரிய நண்பர் சேர நாட்டு அரசராகிய சேரமான் பெருமாள் நாயனார்.



சுந்தரமூர்த்தி நாயனார்

சேர நாட்டிலே ஊரொன்றுக்கூடாகச் சுவாமிகள் சென்றார்கள். ஒரு வீட்டில் அழுகைக் குரலும் எதிர் வீட்டில் மங்கல ஒலியும் கேட்கவே சுவாமிகள் காரணத்தை வினாவி அறிந்தார். சில வருடங்களுக்கு முன் ஒரே வயதுள்ள இரு பாலகர்களில் ஒருவனை முதலை விழுங்கிவிட்டது. தப்பிய மற்றைய பையனுக்கு அன்று பூணூற் சடங்கு நிகழ்வதால் தமது பிள்ளையை நினைத்து தாய், தகப்பன் வருந்துவதை அறிந்த சுவாமிகள் அவர்களுக்கு ஆறுதல் கூறினார். "கரைக்கால் முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே" என்று முதலையிருந்த குளத்தடியிற் பாடினார். சென்றகால வளர்ச்சியுடன் முதலை அப்பிள்ளையைக் கரையிலே உமிழச் செய்து பெற்றாரிடம் சேர்த்தருளினார். பின் தமிழ் நாட்டிலுள்ள பல தலங்களுக்கும் சென்று வணங்கி அரிய பல தேவாரங்களைப் பாடினார்.

ஈற்றில், தம்மைச் சிவபெருமான் தம்முடன் சேர்க்க வேண்டுமென்று வேண்டினார். பெருமான் அனுப்பிய வெள்ளை யானையில் ஏறித் தேவர்கள் சூழ்ந்து வர சுந்தரமூர்த்தி சுவாமிகள் கைலையைச் சேர்ந்தார். இவர் கைலை சேர்ந்தது ஆடி மாதச் சோதி நட்சத்திரத் தினத்திலாம்.

'அத்தா உனக் காளாய் இனி அல்லேன் எனலாமே'

## வினாக்கள்

1. வன்றொண்டர் என்ற பெயர் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு ஏற்பட்டதேன்?
2. சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அரிய பெரிய நண்பர் யார்?
3. விட்ட இடம் நிரப்புக-
   (அ) ஒரு வீட்டில் அழுகைக் குரல் கேட்டது. எதிர் வீட்டில்..................ஒலி கேட்டது.
   (இ) சுந்தரமூர்த்தி நாயனார்.........................................தினத்திலே கைலை சேர்ந்தார்.
4. சுந்தரமூர்த்தி நாயனார் எதில் ஏறிக் கைலை சேர்ந்தார்.?

# சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்

## (1)

### திருநாகைக் காரோணப் பதிகம்

**பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடி**
**பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்**
**செத்தார்தம் எலும்பணிந்து சேவேறித் திரிவீர்**
**செல்வத்தை மறைத்து வைத்தீர் எனக்கொருநாள் இரங்கீர்**
**முத்தாரம் இலங்கிமிளிர் மணிவயிரக் கோவை**
**அவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்**
**கத்தூரி கமழ்சாந்து பணிந்தருள வேண்டும்**
**கடல் நாகைக் காரோணம் மேவியிருந்தீரே.**

**பொருள்:** கடல் சூழ்ந்த திருநாகைக் காரோணம் என்னும் தலத்தில் இருப்பவரே! பல ஊர்களுக்கும் சென்று இரந்து உண்பவரே! நீர் பல பாடல்களையும் பாடிக் கொண்டு பெண்களோடு வஞ்சகமாகப் பேசுகிறீர். வஞ்சகச் செயல்களைச் செய்கிறீர். இறந்து போன பிரமா விஷ்ணுக்களுடைய எலும்பை ஆபரணமாகக் கொண்டு இடபத்திலே ஏறி எங்கும் செல்லுவீர். என் செல்வத்தையும் மறையச் செய்துவிட்டீர். என்னை இன்று கண்ணெடுத்துப் பார்க்க வேண்டும். எனக்கு முத்தும் மணியும் வயிரமும் பொருந்திய மாலையை அணிய அருள் செய்ய வேண்டும். மேனியிலே பூசுவதற்கு நல்ல வாசம் பொருந்திய புனுகும் சந்தனமும் தரவேண்டும்.

**குறிப்பு:** பத்தூர்-பல இடங்கள், புக்கு-புகுந்து, கிறி பேசி-மயக்கத்தைத் தரும் வார்த்தை பேசி, படிறு-வஞ்சகம், சே-இடபம், முத்துஆரம்-முத்துமாலை, இலங்கி-பிரகாசித்து, மிளிர்-விளங்கும், கோவை-மாலை.

(சுந்தரமூர்த்தி சுவாமிகள் இறைவனைத் தோழனாகக் கொண்டார். ஆகையால் அவர் வேண்டியவற்றைச் சிவனிடமிருந்து கேட்டுப் பெற்றார்.)

## (2)

## திருக்கடவூர் மயானம்

**மருவார் கொன்றை மதிசூடி**
**மாணிக்கத்தின் மலைபோல**
**வருவார் விடைமேல் மாதோடு**
**மகிழ்ந்து பூதப் படைசூழத்**
**திருமால் பிரமன் இந்திரற்கும்**
**தேவர் நாகர் தானவர்க்கும்**
**பெருமான் கடவூர் மயானத்துப்**
**பெரிய பெருமான் அடிகளே!**

**பொருள்:** விஷ்ணுவுக்கும், பிரமனுக்கும், இந்திரனுக்கும், தேவர்கள் பாதாள உலகத்தவர், அரக்கர் யாவருக்கும் தலைவர். அவரே திருக்கடவூர் மயானத்திலே இருக்கின்ற பெரிய பெருமானாகிய சிவன். வாசனை வீசும் கொன்றை மாலையும் பிறைச் சந்திரனும் அணிவார். சிவந்த மாணிக்க மலை போல் உமாதேவியாருடன் பூதங்கள் தம்மைச் சுற்றி வர இடப வாகனத்தில் வருவார்.

**குறிப்பு:** மரு-வாசனை, ஆர்-நிரம்பிய, தானவர்-அசுரர், அடிகள்-கடவுள், சிவன்.

## (3)

## திருக்கேதீச்சரம்

(இது எமது இலங்கையிலே மன்னார்ப் பகுதியிலுள்ள மிகப் பழைய சிவத்தலம். பாலாவியின் கரையிலுள்ளது. கேது என்னும் பாம்பு வழிபட்ட தலம் ஆகையால் இப்பெயர் பெற்றது.)

**நத்தார்படை ஞானன்பசு வேறிந்நனை கவிழ்வாய்**
**மத்தம்மத யானைஉரி போர்த்த மணவாளன்**
**பத்தாகிய தொண்டர்தொழு பாலாவியின் கரைமேல்**
**செத்தா ரெலும்பணிவான்திருக் கேதீச்சரத்தானே.**

**பொருள்:** சங்காகிய படையை உடைய ஞானம் மிக்க (விஷ்ணுவாகிய) இடபத்திலே ஏறி வருவார். மதம் பொருந்திய தூங்கும் வாயையுடைய யானையின் தோலை அணிந்தவர். என்றும் மணவாளக் கோலமுடையவர். இத்தகைய சிவனுக்குரிய தலம், அன்பு மிக்க தொண்டர்கள் வழிபடுகின்ற பாலாவியின் கரையிலுள்ள திருக்கேதீச்சரமாகும். இறந்தவர்களது எலும்பை அணிந்திருக்கின்றனர். அவரே திருக்கேதீச்சர நாதர்.

**குறிப்பு:** நந்து - சங்கு, ஞானம் - ஞானத்தையுடைய விஷ்ணு. பசு - விஷ்ணு மூர்த்தியே பசுவாகத் தாங்குகிறார். நனை கவிழ் வாய் - மதத்தால் நனையும் தொங்கும் வாயையுடைய யானை.

## 9 ஆம் பாடம்

# கந்தசுவாமியார் பிரமதேவனுக்கு படிப்பித்தது

**கை**லை மலையிலே சிவபிரானையும் உமாதேவியாரையும் வணங்குவதற்குப் பிரமதேவன் வந்தான். இருவரையும் வணங்கிச் செல்லும்போது என்றும் இளையவராகிய முருகப் பெருமான் வீற்றிருப்பதைக் கவனிக்காதவன் போலச் சென்றான். அவனைப் பெருமான் கூப்பிட்டார். பிரமன் பணிவுடன் வந்து நின்றான். அவன், தந்தையார் கொடுத்தருளிய படைப்புத் தொழிலைச் செவ்வையாகச் செய்கின்றானா எனப் பெருமான் கேட்டார். “ஆம்” என்று பிரமன் விடை கூறினான். “எதன் துணை கொண்டு படைப்புத் தொழிலைச் செய்கிறாய்” எனக் கந்தசுவாமியார் கேட்டார். “பிரணவமாகிய வேத மந்திரத்தின் துணை கொண்டு செய்கிறேன்” என்றான் பிரமன். அந்த மந்திரத்தின் பொருள் தெரியுமா என்று கேட்டபோது “ஆம்” என்று பதில் தந்தான் பிரமன். “பொருள் கூறு” என்ற போது பிரமன் திகைத்து விழித்தான். தமது திருக் கரத்தால் அவனைக் குட்டி முருகப் பிரான் சிறையிலிட்டார்.

திருமால் முதலிய தேவர்கள் சிவபெருமானிடம் சென்று பிரமனைச் சிறை விடுவிக்க முருகப் பெருமானைக் கேட்குமாறு வேண்டுதல் செய்தார்கள். தேவர்களாதியோர் தம்மைப் புடைசூழச் சிவபிரான் தேவர்கள் வேண்டுதலைத் தம் அருமை மகனாருக்குத் தெரிவித்தார். முதலிலே கந்தசாமியார் மறுத்தார். பின் தந்தையார் சொற்படியே பிரமனைச் சிறை விடுத்தார். பிரமன் செருக்கடங்கிப் பணிவுடன் முருகப் பெருமான் முன்னிலையில் தாழ்ந்தெழுந்தான்.

தந்தையார் பிரணவத்தின் பொருளைச் சொல்லுமாறு முருகப் பெருமானை அன்புடன் கேட்டார். தம்மைக் குருவாக ஏற்றால் பொருள் சொல்லுவதாக முருகன் தெரிவித்தார். சிவபெருமான் ஒப்புக் கொண்டார். முருகன் ஓங்காரத்தின் தெளி பொருளைத் தந்தைக்கு இயம்பினார். இதனாலே முருகப் பெருமானுக்குச் **‘சிவகுரு’** என்ற பெயர் வழங்குவதாயிற்று.

“குருவாய் அரற்கும் உபதேசம் வைத்த குகனே”

### வினாக்கள்

1. பிரமதேவன் செய்யுந் தொழில் யாது?
2. பிரமதேவன் எதன் துணை கொண்டு படைப்புத் தொழில் செய்கிறான்?
3. யார் கேள்விப்படி முருகன் பிரமதேவரை விடுதலை செய்தார்?
4. முருகப் பிரானுக்குச் சிவகுரு என்று ஏன் பெயர் வந்தது?

# 10 ஆம் பாடம்

## சிவபெருமான் மண் சுமந்தமை



சிவபெருமான் பிட்டுக்கு மண்சுமத்தல்

மதுரையிலிருந்து அரசாண்ட அரிமர்த்தன பாண்டிய மன்னன் தன் மந்திரியாகிய மாணிக்க வாசகரை. அதிகம் தண்டித்து விட்டான். அப் பெரியாரோ சிவமே தமக்குத் துணை யெனப் பொறுமையோடு தண்டனையை அனுபவித்தார். குழந்தை வருந்து வதைக் கண்டு தந்தை பொறுக்க மாட்டார். சிவபெருமான் தன் அன்பர் வருத்தத்தை நீக்கத் திருவுளங் கொண் டார். வைகை ஆற்றைப் பெருக்கெடு க்கச் செய்தார்.

சாந்தமான வைகை மூர்க்கமாகப் பெருகத் தொடங்கியது. அது எல்லை கடந்து பரவியது. கரைகளை உடைத்து மக்களை நடு நடுங்கச் செய்தது. பாண்டியன். அளவு கடந்து அவரை வருத்திய தன் தவறை உணர்ந்து மாணிக்கவாசகரிடம் மன்னிப்புக் கேட்டான்.

மன்னன், ஆறுகரையை உடைக்காமல் தடைசெய்து கட்டுவிக்கும் வேலையை முன்னின்று நடத்துமாறு மாணிக்க வாசகரை வேண்டினான்.

அரச கட்டளைப்படி ஊரவர் எல்லோரும் தமக்கு அளந்து விடப்பட்ட பங்கை அடைத்தனர். ஒரேயொரு பங்கு மாத்திரம் அடைக்கப்படவில்லை. சோமசுந்தரப் பெருமானை நம்பிப் பிட்டு விற்று வாழும் வந்தி என்னும் ஏழைக் கிழவி மதுரையிலே வசித்தாள். அவளுக்கு வேலையாள் கிடைக்கவில்லை. பெருமான் கோயில் வந்து நின்று "சுவாமி, யானோ உற்றார் உறவினர் அற்ற ஏழை. எனக்குக் கூலி வேலை செய்ய வருபவர் யாரும் இல்லை. அரசன் தண்டிக்கப் போகின்றானே. பேய் போன்ற இந்த ஏழையைச் சோமசுந்தரப் பெருமானே! நீயே கண்ணெடுத்துப் பார்" என்று இரங்கி அழுதாள். பெருமான் அவளுக்கு இரங்கி அழுக்குப் படிந்த கந்தையுடுத்து அழகான மேனியையும் அழுக்குப் படிந்ததாக்கினார். தலையிலே கூடையையும், தோளிலே மண் வெட்டடியும் கொண்டு வீதி வழியே தம்மை வேலை கொள்வார் உளரோ என உரத்த குரலில் கேட்டார்.



கூலியாளாக வந்து பிட்டுக்கு மண் சுமந்த சிவபெருமானை, பாண்டிய மன்னன் சேவகனைக் கொண்டு அடிப்பித்தல்

வந்திக் கிழவி அந்தக் கூலியாளைக் கூப்பிட்டு உண்ணப் பிட்டும் கொடுத்து கரையை அடைக்கும் வேலைக்கு அனுப்பினாள். கூலியாள் ஒரு கூடை மண்ணைக் கரையிலே கொட்டுவார். களைத்தவர் போலக் கொன்றை மர நிழலிலே கண் வளர்வார். கந்தைத் துணியிலே தாம் கட்டிவந்த பிட்டை அருந்துவார். வந்தித் தாயும் கூலியாளை வேலை செய்ய ஏவியும் பயனில்லை. வருத்தத்தோடு வீடு திரும்பினாள்.

வேலையை மேற்பார்வை செய்பவர்கள் கூலியாளின் விளையாட்டைப் பார்த்தனர். ஒரு ஏவலாளன் கைச் சவுக்கால் கூலியாளுக்கு வலப்பாகத்தில் அடித்தான். அந்த அடி எல்லா ஆன்மாக்களின் உடம்பிலும் உறைத்தது. உலகம் திடுக்கிட்டது. கூலியாள் மதுரைச் சொக்கநாதரே என அறிந்து யாவரும் மண் சுமந்த பெருமானையும் அவரை மண் சுமக்கச் செய்த வந்தி அம்மையையும் துதித்தனர். மாணிக்கவாசகரை வணங்கினர்.

"இன்றெனை உய்யக் கொள்வாய் போற்றி"

## வினாக்கள்

1. வைகை பெருகியதற்குக் காரணம் யாது?
2. எங்குள்ள கடவுளுக்குச் சோமசுந்தரப் பெருமான் என்று பெயர்?
3. எதிர்ப் பதம் எழுதுக
   (அ) சாந்தம்
   (ஆ) வேலையாள்
   (இ) அழுக்கு
   (ஈ) உரத்த குரல்
   (உ) வருத்தம்
4. எப்போது கூலியாள் மதுரைச் சொக்கநாதர் என்று மதுரையிலுள்ளார் அறிந்தனர்?

## திருவாசகம்



மாணிக்கவாசக சுவாமிகள்

(1)

### தில்லையில் அருளிய அச்சோப் பதிகம்

**முத்தி நெறி அறியாத மூர்க்கரொடு முயல்வேனை**
**பத்தி நெறி அறிவித்துப் பழவினைகள் பாறும்வண்ணம்**
**சித்தமலம் அறிவித்துச் சிவமாக்கி எனை ஆண்ட**
**அத்தன் எனக் கருளியவா றார்பெறுவார் அச்சோவே.**

**பொருள்:** சிவபிரானை அடையும் வழியை அறியாத கெட்டவர்களோடு சேர்ந்தவன் யான். எனினும் அடியேனுக்கு அன்பு வழியைக் காட்டியருளினார் சிவபெருமான். என் பழைய பொல்லாத வினைப் பயன்கள் அழிந்தொழியும்படி மன அழுக்கை நீக்கினார். என்னையும் தன்னைப் போல (சிவமாக) ஆக்கி ஆண்டருளிய என் பிதாவாகிய சிவன் எனக்குச் செய்த திருவருளை யார் தான் அறிய முடியும் (ஒருவராலும் முடியவே முடியாது.)

**குறிப்பு:** முத்தி - மோட்சம், சித்த மலம் - மன அழுக்கு, அத்தன் - பிதா, அச்சோ - இது என்ன ஆச்சரியம்.

## (2)
# அன்னைப் பத்து



மாணிக்கவாசக சுவாமிகள்

**வேத மொழியர்வெண் நீற்றர்செம் மேனியர்**
**நாதப் பறையினர் அன்னே என்னும்**
**நாதப் பறையினர் நான்முகன் மாலுக்கும்**
**நாதரிந் நாதனார் அன்னே என்னும்**

**பொருள்:** சிவபெருமானுடைய வாயினின்றும் வருவன வேதவாக்குகள். திருமேனியில் அவர் வெண்ணிற விபூதி அணிந்திருக்கின்றார். அவரது திருமேனி செக்கச் சிவந்தது. அவருடைய திருக்கரத்திலே எல்லா ஒலிகளுக்கும் மூலமாகிய நாத ஒலியை எழுப்பும் உடுக்கை உண்டு. என் தாயே அதனைப் பாருங்கள். இந்த உடுக்கையை உடையவரே பிரமா, விஷ்ணுக்களுக்குத் தலைவர்.

**குறிப்பு:** நாதப் பறை - ஓசையை எழுப்பும் உடுக்கை, இது சிவபெருமானது வலக்கரத்திலே உள்ளது.

(இத்திருவாசகப் பாடல் ஒரு பிள்ளை தாயை நோக்கிக் கூறியுள்ளதாக அமைந்திருக்கிறது).

## 11 ஆம் பாடம்

# கௌசிக முனிவர்

ஓர் ஊரில் கௌசிகன் என்னும் ஒருவன் இருந்தான். அவன் பல காலம் தவம் செய்தான். ஒரு தினம் அவன் ஒரு மரத்தின் கீழ் இளைப்பாறினான். அப்பொழுது ஒரு கொக்கு அவன் மேல் எச்சமிட்டது. கோபத்துடன் அதைப் பார்த்தான். கொக்கு அப்படியே சாம்பராயிற்று. தனக்குத் தவம் பலித்து விட்டது என்ற செருக்குடன் நடந்து சென்றான்.

கடும் பசி எழவே ஒரு வீட்டிற்குப் பிச்சைக்குச் சென்றான். "அம்மா பசிக்கிறது. பிச்சை இடுங்கள்" என்றான். சிறிது நேரம் நின்றான். அம்மாள் உடனே பிச்சை போடவில்லையே என்று தனக்குள்ளே எண்ணிச் சினங்கொண்டான். அம்மையார் சுகமில்லாத தமது கணவனுக்கு வேண்டிய பணிவிடை செய்து கொண்டிருந்தார்.

அம்மையார் தம் கடமையைச் சரிவரச் செய்த பின்னரே பிச்சையுடன் வந்தார். கோபங் கொண்ட கௌசிகன் சினத்துடன் அம்மையாரைப் பார்த்தான். "என்னையும் கொக்கென்று நினைத்தாயோ?" என்று அம்மையார் கேட்டார். கௌசிகன் சினம் இருந்த இடம் தெரியாமல் ஓடி மறைந்துவிட்டது. அத்துணை ஞானம் அம்மையாருக்கு எங்ஙனம் கைவந்தது என்று வினாவினான். "நான் என் கணவனுக்குச் செய்யும் கடமைகளைத் தவறாது செய்வதனாலே ஞானம் பெற்றேன். நீயும் ஞானம் பெற விரும்பினால் வேடனாகிய தருமவியாதனிடத்துச் செல்லுக" என்றார். கௌசிகன் அம்மையாரைப் பணிந்து அவ்வேடனிடம் சென்றான். கௌசிகன், அவனது ஞானம் தாய், தந்தையருக்கு அன்புடன் செய்யும் கடமையினாலேயே கிட்டியது என அறிந்தான். மேலும் தவ வழிகளில் ஈடுபட்டான். முனிவரெனப் பிறர் போற்றும் அளவிற் கௌசிகன் நிலை உயர்ந்தது.

"தன் கடன் அடியேனையும் தாங்குதல்"

### வினாக்கள்

1. கௌசிகன் எங்ஙனம் பிச்சை கேட்டான்?
2. அந்த அம்மாள் பிச்சை போடத் தாமதித்தது ஏன்?
3. "கொக்கென்று நினைத்தாயோ?" இப்படிக் கேட்டவர் யார்?
4. அம்மையாருக்கு எங்ஙனம் ஞானம் ஏற்பட்டது?

## 12 ஆம் பாடம்

# பட்டினத்துப் பிள்ளையார்

இவர் காவிரிப்பூம் பட்டினத்தில் நல்ல சிவபக்தி நிறைந்த குடும்பத்திலே பிறந்தார். இவருக்கு இளமைப் பருவத்திலே திருவெண்காடர் என்று பெயரிட்டனர். ஐந்தாம் வயதிலே தந்தையார் இறக்க இவர் தாயாரே இவரைப் பாதுகாத்தனர். இளம் வயதிலே திறமையாகக் கல்வி கற்று சைவ சாத்திரத்திலே சிறந்து சைவப் பற்றுடையவராக இருந்தார்.

இவர் சிவகலை என்னும் பெண்மணியை மணந்தார். இவர்களுக்குப் பிள்ளைகளில்லாமையால் திருவிடை மருதூர்க் கடவுளை வணங்கி விரதமிருந்தார்கள். ஓர் அன்பருக்குக் கிடைத்த மருதவாணர் என்ற பிள்ளையைத் தமது பிள்ளை போலவே மிக்க அன்புடன் வளர்த்து வந்தார்கள். அந்தப் பிள்ளை வியாபாரம் செய்யப் புறப்பட்டார். வியாபாரம் செய்து ஊர் திரும்பிய பிள்ளை, தந்தையாருக்குக் கொடுக்கும்படி தாயாரிடம் ஒரு பேழையைக் கொடுத்து எங்கோ சென்றுவிட்டார். தகப்பனார் பெட்டியைத் திறந்தபோது அதற்குள்ளே காதற்ற ஊசியும் ஒரு கடிதமும் கண்டார். ஒருவன் இறந்தபின் காதற்ற அற்ப ஊசியும் அவனுடன் வர மாட்டாது என அறிந்து தமது பொருளையெல்லாம் சிவனடியார்களுக்குக் கொடுத்துவிட்டுத் தாமும் துறவியானார்.

இவர் பிச்சை எடுத்து உண்பதை விரும்பாத இவரது சகோதரியார், நஞ்சு கலந்த அப்பத்தைக் கொடுத்தார். சுவாமிகள் **"தன்வினை தன்னைச் சுடும். ஓட்டப்பம் வீட்டைச் சுடும்"** என்று கூறினார். உடனே சகோதரியாரின் வீடு நெருப்புப் பற்றி எரியத் தொடங்கியது.

இவர் தாயார் இறந்த போது பச்சை வாழைத் தண்டிலே தாயாரைக் கிடத்தி யாவரும் ஆச்சரியமடையத் தீ மூட்டித் தாயாரின் கடனைச் செய்து நிறைவேற்றினார். இருந்த இடம் தேடிப் பசிக்கு அன்னம் கிடைத்தால் உண்பார்.

வட தேசத்தை அடைந்து ஓர் இரவு பிள்ளையார் கோயிலிலே யோகத்திலிருந்தார். அரசன் வீட்டிற் களவெடுத்த கள்வர் பிள்ளையார் திருவுருவத்திற்குக் காணிக்கையாக எறிந்த முத்து மாலை இவர் கழுத்தில் விழுந்து விட்டது. ஒரு பாவமும் அறியாத

இவரைக் களவு செய்தவரென்று அரசன் முதலியோர் கழுவிலிடப் பார்த்தபோது கழு மரமே பற்றி எரிந்தது. அது கண்ட அந்தப் பத்திரகிரி என்னும் அரசனும் இவரைப் போலவே துறவியானான்.

சுவாமிகள் பின் தமிழ் நாட்டிற்கு வந்து திருவொற்றியூரில் இடைச் சிறுவர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தார். திடீரென மறைவதும் பின்பு தோன்றுவதுமாய்ப் பல அற்புதங்களைச் செய்தார். பின் அப்பிள்ளைகளைக் கொண்டு ஒரு வண்ணான் சாலினால் தம்மை விளையாட்டாக மூடச்செய்தார். மூடித் திறந்து பார்த்தபோது எல்லோரும் அதிசயிக்கச் சுவாமிகள் சிவலிங்க உருவமாயினார். பட்டினத்தடிகளுக்குத் திருவொற்றியூரில் இன்றும் சமாதி உள்ளது.

"எல்லாப் பிழையும் பொறுத்தருள்வாய் கச்சி ஏகம்பனே"

## வினாக்கள்

1. திருவெண்காடர் மருதூர்க் கடவுளை ஏன் விரதமிருந்து வணங்கினார்?
2. மருதவாணர் திருவெண்காடருக்குப் பேழையுள் வைத்து அனுப்பியவை எவை?
3. நிரப்பி முடிக்கவும்

 (அ) ஒருவன் இறந்த பின் காதற்ற..............................

 (ஆ) தன் வினை ..............................

 (இ) பட்டினத்தாருக்குத் திருவொற்றியூரில்..............................

## 13 ஆம் பாடம்

# யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரன் கோயில்

"திரைகடலோடியும் திரவியம் தேடு" என்றார் ஔவைப் பிராட்டியார். அவர் வாக்குப்படி பொருள் தேட இந்தியாவிலிருந்து கடல் கடந்து வந்தவர் கோபாலச் செட்டியார். அவருக்கு மகன் வைத்திலிங்கச் செட்டியார் பொருள் தேடுவதில் செட்டிமார் வல்லவர். வைத்தியலிங்கச் செட்டியார் முத்து வியாபாரத்தால் பெரும் பொருள் ஈட்டினார்.

இவருக்கு ஆசிரியராக இருந்தவர் கல்வியிலும் சைவ ஒழுக்கத்திலும் சிறந்தவராகிய கூழங்கைத் தம்பிரான். அவர் சொல்லியபடி நடப்பவர் செட்டியார். செட்டியார் பெரிய வீடு ஒன்று கட்ட நினைத்தார். வீடு கட்டுமுன் சிவபிரானுக்கு ஆலயம் எழுப்ப வேண்டும் என்றார் தம்பிரான். அவர் வாக்குப்படியே செட்டியார் பெரிய நிலப்பரப்பை விலைக்கு வாங்கினார். 1790 ஆம் ஆண்டு சிவபெருமானுக்குப் பெரிய கோயிலைக் கட்டுவித்தார் வைத்தியலிங்கச் செட்டியார். இவ்வண்ணம் பொருளோடு அருளும் தேடினார்.

உங்கள் உடலுக்கு நோய் வந்தால் வைத்தியர் மருந்து தருவார். உடல் நோய்க்கு ஊர் தோறும் வைத்தியர்கள் பலர் உளர். உயிருக்கு வரும் நோய்க்கு வைத்தியர் சிவபெருமான் ஒருவரே. இச்சிவபெருமானுக்குரிய கோயிலையே வண்ணார்பண்ணை வைத்தீஸ்வரன் கோவில் என்கிறோம். அங்குள்ள சிவனுக்கு வைத்தீஸ்வரன் என்றும் தேவிக்குத் தையல்நாயகி என்றும் பெயர். இக்கோயிலைப் போலவே குளமும் அழகானது. யாழ்ப்பாணப் பட்டினத்தவர் ஆசாரமுடையவராய் இருப்பதற்கு இக்கோயிலே காரணம். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் இக்கோயிலின் வசந்த மண்டபத்தில் அரிய பிரசங்கங்கள் செய்தார். அவர் மருமகன் வித்துவ சிரோமணி பொன்னம்பலப் பிள்ளையும் புராணப் பிரசங்கங்கள் செய்தார். சமீபகாலத்தில் பழைய முறைப்படி சுவாமிநாதத் தம்பிரானுடைய பிரசங்கங்கள் இங்கு நடைபெற்று வந்தன.

"மந்திரமும் தந்திரமும் மருந்துமாகித்
தீராநோய் தீர்த்தருள வல்லான்"

### வினாக்கள்

1. செட்டியார் எதில் வல்லமை உடையவர்?
2. கூழங்கைத் தம்பிரான் யார்?
3. உயிர் நோய்க்கு வைத்தியர் யார்?
4. வைத்தீஸ்வரன் கோயில் மண்டபத்தில் பிரசங்கம் செய்த இரு பெரியார் பெயர் தருக.

## திருமந்திரப் பாடல்



**ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை**
**இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை**
**நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை**
**புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே**

**பொருள்:** விநாயகப் பெருமானுக்கு ஐந்து திருக்கரங்கள் உண்டு. அவர் முகம் ஆனை முகத்தைப் போன்றது. அவர் முகத்திலுள்ள கொம்பு பிறைச் சந்திரனைப் போன்றது. அவர் சிவபெருமானுக்கு மூத்த புதல்வர். அவர் ஞானமே வடிவானவர். அப்பெருமானை என் மனத்திலே இருத்தி யான் வணங்குகிறேன்.

**குறிப்பு:** ஐந்து கரம்: விநாயகப் பெருமானுக்கு நான்கு திருக்கரங்களும் ஒரு துதிக்கை யுமிருப்பதால் ஐந்து கரங்கள் உண்டு.

ஆனை முகம்: யானைக்கு முகத்திலுள்ள துதிக்கை ஓங்கார வடிவமானது. இந்து - (பிறைச்) சந்திரன். எயிறு - பல். நந்தி - சிவபெருமான். புந்தி - மனம்.

## திருமுருகாற்றுப்படை

**முருகனே! செந்தி முதல்வனே! மாயோன்**
**மருகனே! ஈசன் மகனே!-ஒருகைமுகன்**
**தம்பியே! நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்**
**நம்பியே கைதொழுவேன் நான்.**

**பொருள்:** முருகப் பெருமானே! திருச்செந்தூரில் எழுந்தருளியிருக்கும் முழுமுதலே! விஷ்ணு மூர்த்திக்கு மருமகனே! சிவபெருமானுக்கு இளைய குமாரனே! ஒப்பில்லாத துதிக்கையுடைய விநாயகப் பெருமானுக்குத் தம்பியே! உன் வீரக்கழல் அணிந்த பாதங்களை எனக்குத் துணையென நம்பி நான் எப்பொழுதும் கைகுவித்துத் தொழுவேன்.



விநாயகப் பெருமான்

## திருப்புகழ்

**ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே**
**ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே**
**கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகம் ஒன்றே**
**குன்றுருவ வேல் வாங்கி நின்றமுகம் ஒன்றே**
**மாறுபடு சூரரை வதைத்தமுகம் ஒன்றே**
**வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே**
**ஆறுமுகம் ஆனபொருள் நீஅருளல் வேண்டும்**
**ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே.**

**பொருள்:** மிகச் சிறந்த திருவண்ணாமலையில் வீற்றிருக்கின்ற முருகப் பெருமானே! ஆண்மயிலில் ஏறித் திருவிளையாடலைச் செய்கின்றது உனது ஒரு முகம். சிவபெருமானுடன் பிரணவ மந்திரப் பொருளை எடுத்துரைக்கின்றது உனது ஒரு முகம். உன்னைப் புகழ்ந்து தோத்தரிக்கும் அடியார்களின் பொல்லாத வினைகளைத் தீர்ப்பது உனது ஒரு திருமுகம். (தாரகன் மறைந்து நின்ற) கிரவுஞ்ச மலையை ஊடுருவித் தாக்கிய வேலை ஏந்தி நின்றது ஒரு திருமுகம். உன்னோடு பகை கொண்ட சூரபன்மனைக் கொன்றது உனது ஒரு திருமுகம். வள்ளியம்மையாரைத் திருமணஞ் செய்ய வந்தது உனது ஒரு திருமுகம். இங்ஙனம் ஆறு திருமுகங்களைக் கொண்டு திருவிளையாடல் புரிந்த கடவுளே! நீ எனக்கும் திருவருள் செய்தருள வேண்டும்.

**குறிப்பு:** ஏறு மயில்-ஆண் மயில். ஞானமொழி-வேதப் பொருள். கூறும் - உன் புகழைச் சொல்லும். குன்று-கிரவுஞ்ச மலை. ஆதி அருணாசலம்-சிறந்த திருவண்ணாமலை.

திருச்சிற்றம்பலம்

❖❖❖❖❖❖❖❖❖

## உலக நீதி

### காப்பு

**உலகநீதி புராணத்தை உரைக்கவே**
**கலைகளாய் வரும் கரிமுகன் காப்பு**

உலக நீதி-உலகம் முழுவதற்கும் பொருத்தமான அறிவுரை. மாண்வர் அறிய வேண்டிய நீதிகள் இவை. கலைகள்-சாத்திரம், கரிமுகன்-யானை முகக் கடவுள், காப்பு-பாதுகாவல்

**ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்**
**ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்**
**மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்**
**வஞ்சனைகள் செய்வாரோ டிணங்க வேண்டாம்**
**போகாத இடந்தனிலே போக வேண்டாம்**
**போகவிட்டுப் புறஞ்சொல்லித் திரிய வேண்டாம்**
**வாகாருங் குறவருடை வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.**

**குறிப்பு:** ஓதாமல்-படிக்காமல், பொல்லாங்கு-கொடுமை, புறஞ் சொல்லுதல்-ஒருவரில்லாத நேரம் தூற்றுதல், வாகாரும்-வெற்றியையுடைய.

**நெஞ்சாரப் பொய்தன்னைச் சொல்ல வேண்டாம்**
**நிலையில்லாக் காரியத்தை நிறுத்த வேண்டாம்**
**நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம்**
**நல்லிணக்கம் இல்லாரோ டிணங்க வேண்டாம்**
**அஞ்சாமல் தனிவழியே போக வேண்டாம்**
**அடுத்தவரை ஒருநாளும் கெடுக்க வேண்டாம்**
**மஞ்சாருங் குறவருடை வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.**

**குறிப்பு:** அடுத்தவர்-நம்பி நம்மைச் சேர்ந்தவர், மஞ்சாரும்-வலிமைமிக்க.

**மனம்போன போக்கெல்லாம் போக வேண்டாம்**
**மாற்றானை உறவென்று நம்ப வேண்டாம்**
**தனந்தேடி உண்ணாமல் புதைக்க வேண்டாம்**
**தருமத்தை ஒருநாளும் மறக்க வேண்டாம்**
**சினந்தேடி அல்லலையும் தேட வேண்டாம்**
**சினந்திருந்தார் வாசல்வழிச் சேர வேண்டாம்**
**வனந்தேடும் குறவருடை வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.**

**குறிப்பு:** மாற்றான் - பகைவன், தனம் - பொருள், அல்லல் - துன்பம், சினந்தேடி அல்லலையும் தேட வேண்டாம் - எங்களுக்குக் கோபம் வந்தால் துன்பம் வந்து சேரும், சினந் திருந்தார் - கோபத்தில் நின்று நீங்காதவர், வனம் - காடு.

**குற்றமொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம்**
**கொலைகளவு செய்வாரோ டிணங்க வேண்டாம்**
**கற்றவரை ஒருநாளும் பழிக்க வேண்டாம்**
**கற்புடைய மங்கையரைக் கருத வேண்டாம்**
**கொற்றவனோ டெதிர்மாறு பேச வேண்டாம்**
**கோயிலில்லா ஊரில்குடி யிருக்க வேண்டாம்**
**மற்றுநிகர் இல்லாத வள்ளி பங்கன்**
**மயிலேறும் பெருமானை வாழ்த்தாய் நெஞ்சே.**

**குறிப்பு:** குற்ற மொன்றும் பாராட்டித் திரிய வேண்டாம் - பிறருடைய குற்றங்களைப் பெரிதாக்கிச் சொல்ல வேண்டாம், கொற்றவன் - அரசன், எதிர் மாறு - எதிர்த்த சொல்

## அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கென இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள வெளியீடுகள்

### பொது நூல்கள்

1. பன்னிருதிருமுறைத் தோத்திரத் திரட்டு
2. சைவசமய சாரம்
3. விரதங்களும் விழாக்களும்
4. பன்னிருமாத நினைவுகள்
5. இந்துசமய சாரம்
6. சிவாலய தரிசனவிதி
7. ஔவையார் அறிவுச் செல்வங்கள்

### சிறப்பு நூல்கள்

8. சைவ போதனி - கீழ்ப்பிரிவு
(4ம், 5ம் வகுப்புகள்)

9. சைவ போதனி - மத்தியபிரிவு
(6ம், 7ம் வகுப்புகள்)

10. சைவ போதனி - பாலர்பிரிவு
(2ம், 3ம் வகுப்புகள்)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.